பகுத்தறிவுப் பாசறை

தந்தை பெரியார்

அவர்களது

95-ஆவது ஆண்டு பாராட்டு விழா

சிறப்பு மலர்

1973



மாவட்ட நூலக ஆணைக்குழு,

தஞ்சாவூர்.

834

தபால் பெட்டி 674 தொலைபேசி 82645

அமுத நிலையம் லிமிடெட்,

புத்தக வெளியீட்டாளர்கள், விற்பனையாளர்கள்,

1/45, ராயப்பேட்டை நெடுஞ்சாலை,

சென்னை-600014.

***

திரு. கி. வா. ஜ., பி. ஸ்ரீ., பெ. தூரன், அகிலன், அநுத்தமா, எல்லார்வி, பி. எஸ். ராமய்யா, பி. எம். கண்ணன், வி. டி. சுப்பையா முதலியார் மற்றும் சிறந்த ஆசிரியர்களால் எழுதப்பெற்ற இலக்கியம், விஞ்ஞானம், நாவல், நாடகம், சிறுகதை முதலான அரிய நூல்கள் எங்கள் வெளியீடுகள்.

பொது நூல் நிலையங்கள், பள்ளி நூல் நிலையங்கள், எல்லா நூல் நிலையங்களிலும் இடம் பெறவேண்டியவை.

விரிவான விலைப்பட்டியலுக்கும், விபரங்களுக்கும் மேல்கண்ட முகவரிக்கு எழுதுக.

அமுத நிலையம்.

மாவட்ட நூலக ஆணைக் குழு
தஞ்சை

பகுத்தறிவுப் பாசறை

தந்தை பெரியார்
அவர்களின்
95-வது ஆண்டு பாராட்டு விழா
சிறப்பு மலர்

15 – 10 – 1973

தலைமை : திருமிகு. **எஸ். பெத்தண்ணன்** அவர்கள்
நகரத் தந்தை, தஞ்சை.

மாண்புமிகு தமிழக முதல்வர்

டாக்டர் கலைஞர்

திருவுருவப் படத்திறப்பு; அறிவுரை

தந்தை பெரியார் அவர்கள்

மலர் வெளியீடு,

திருமிகு **கி. வீரமணி**, எம். ஏ., பி. எல்., அவர்கள்.

நூலக ஆணைக்குழு, தஞ்சாவூர்.

உறுப்பினர்கள் :

தலைவர் : முத்துப்பேட்டை திரு. **ந. தருமலிங்கம்.**

செயலர் : திரு. **எல். இராமச்சந்திரன்**, பி. ஏ., எல். டி.,

நியமன உறுப்பினர்கள் :

1. திரு. எஸ். யூசுப்சா மரைக்காயர்
2. திரு சி. சுவாமிநாதன்
3. திரு. பி. முருகையன், எம். ஏ., பி. டி.,
4. திரு. கே. முத்துசாமி, பி. ஏ., பி. டி.,
5. திரு. ஏ. மகாலிங்கம், பி. ஏ., பி. டி.,
6. திரு. கே. இராமசாமி, பி. ஏ., பி. டி.,
7. திருமதி டி. பி. பத்மாவதி
8. திரு. ஏ. உஸ்மான் சரிப், எம். ஏ.,
9. திரு. டி. வி. சம்பத், எம். எல். ஏ.,

நகராட்சி உறுப்பினர்கள் :

10. திரு. எஸ். முத்துசாமி பாண்டியன்
11. திரு. ஜி. மக்பூல் உசேன்
12. திரு. எஸ். பாலசுப்ரமணியம்
13. திரு. பி. கோவிந்தசாமி முதலியார்
14. திரு. கே. ஆர். ஜி. பால்
15. திரு. கருணை ஜமால்
16. திரு. கே. எஸ். பக்கிரிசாமி
17. திரு. எஸ். நாடிமுத்து

வட்ட உறுப்பினர்கள் :

18. திரு. கே. மருதமுத்து
19. திரு. எஸ். தங்கமுத்து நாட்டார்
20. திரு. பி. சம்பந்தம்
21. திரு. ஏ. ஆர். சிவசங்கரன்
22. திரு. எஸ். விஜயராகவன்
23. திரு. ப. மு. அப்துல் வஹாப்
24. திரு. ஆர். இரகுநாத பிள்ளை
25. திரு. ஆர். சுப்பராமன்
26. திரு. சா. திருஞானசம்பந்தமூர்த்தி
27. திரு. எஸ். நடராசன்
28. திரு. என். முத்தையா
29. திரு. ஜி. இராஜமாணிக்கம்.

மன்னை
ப. நாராயணசாமி
உணவு - கூட்டுறவுத்துறை
அமைச்சர்.

தமிழ் நாடு அரசு
தலைமைச் செயலகம்
சென்னை - 600009

21—9—73.

அன்புடையீர்,

தஞ்சை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் சார்பில் தந்தை **பெரியார்** அவர்களுக்கு பாராட்டு விழாவும், பேரறிஞர் **அண்ணா** அவர்களின் பிறந்த நாள் விழாவும் கொண்டாடவிருப்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். தந்தையின் விழாவும், அண்ணனின் விழாவும் சீரும் சிறப்புமாக நடைபெற எனது இதயங்கனிந்த வாழ்த்துக்கள்.

தஞ்சை மத்திய நூலகத்தில் திறக்கப்படவிருக்கும் தமிழக முதல்வர் டாக்டர் **கலைஞர்** அவர்களின் திருஉருவப்படம் நூலகத்திற்கு நல்லணி சேர்ப்பதாக அமையும்.

விழா சிறப்புற நடந்தேறிடவும், விழா மலர் மணம் கமழ்ந்திடவும் எனது உள்ளங்கனிந்த நல் வாழ்த்துக்கள்.

அன்புள்ள,

ப. நாராயணசாமி.

பெறுநர் :

திரு. ந. தருமலிங்கம்,
தலைவர்,
மாவட்ட நூலக ஆணைக்குழு,
தஞ்சாவூர்.

மாநில பொது நூலக இயக்ககம்,
சென்னை-8.

சென்னை-8,
14—9—73.

அன்புடையீர்,

1. வணக்கம்.

2. தஞ்சை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் சார்பில்

(i) பகுத்தறிவுத் தந்தை அவர்களுக்குப் பாராட்டு விழாவும்.

(ii) பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாள் விழாவும்.

(iii) முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் திருவுருவப்படத்திறப்பு விழாவும். நடப்பதறிய மகிழ்கிறேன்.

3. விழா சிறப்பாய் நடந்து பயன் தர விழைகிறேன்.

அன்புள்ள,

வே. தில்லைநாயகம்.

பெறுநர் :
திரு. ந. தருமலிங்கம், அவர்கள்
தலைவர்,
மாவட்ட நூலக ஆணைக்குழு,
தஞ்சாவூர்.

வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய

மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவர்கள்.

1. திருமிகு. கே. ஜி. சுவாமிநாதன்,
நூலக ஆணைக்குழு, தென்னாற்காடு, கடலூர்.

2. ,, எம். ஏ. கே. பக்கீர் முகைதீன்
நூலக ஆணைக்குழு, திருநெல்வேலி.

3. ,, பி. முருகையன்
நூலக ஆணைக்குழு, திருச்சி.

4. ,, டாக்டர் டி. ஏ. வஜீத்
எம். ஏ., எம். எஸ்.,
நூலக ஆணைக்குழு, வடாற்காடு, வேலூர்.

5. ,, சொ. காவேரிமணியம்
பி. எஸ்ஸி., பி. எல்., எம். எல். ஏ.,
நூலக ஆணைக்குழு, மதுரை.

6. ,, எஸ். சுந்தரமூர்த்தி பி. ஏ., பி. டி.,
செயலர் பொறுப்பு,
நூலக ஆணைக்குழு, தர்மபுரி.

வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய

(மாவட்ட மத்திய நூலகங்களின்) மைய நூலகர்கள்.

1. திரு. தெ. சு. மீனுட்சிசுந்தரம்,
நூலகர், மைய நூலகம்,
நூலக ஆணைக்குழு, திருநெல்வேலி.

2. ,, V. ஆறுமுகம் பி. ஏ., டி. எல். எஸ்.,
நூலகர், (செயலர் பொறுப்பு.)
நூலக ஆணைக்குழு, கோவை.

3. ,, பி. வேதமூர்த்தி பி. ஏ., பி. எல். எஸ்ஸி.
நூலகர், நூலக ஆணைக்குழு, மதுரை.

4. ,, சு. நமசிவாயம் பி. ஏ., டி. எல். எஸ்ஸி.,
நூலகர், நூலக ஆணைக்குழு, கடலூர்.

5. ,, தொ. சி. குப்புசாமி
பி. ஏ., டி. எல். எஸ்ஸி.,
நூலகர், நூலக ஆணைக்குழு, வேலூர்.

6. ,, எஸ். பத்மாவதி பி. ஏ., பி. எல். எஸ்ஸி.,
நூலகர், நூலக ஆணைக்குழு, சேலம்.



காவியமானவர் — காலத்தை வென்றவர்



திருக்குவளையில் பூத்த புரட்சி மலர்

டாக்டர் கலைஞர்



தமிழ்நாட்டரசின்

மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர்

முத்துப்பேட்டை ந. தருமலிங்கம்
தலைவர்
மாவட்ட நூலக ஆணைக் குழு.



இல. இராமச்சந்திரன், பி. ஏ., எல். டி.,
செயலாளர்
மாவட்ட நூலக ஆணைக் குழு.

நன்றி உரை

வணக்கத்திற்கும், மரியாதைக்கும் உரிய தந்தை பெரியார் அவர்கள் "ஒரு திறந்த புத்தகம்" என்பதை தமிழ்நாடு ஒப்புக் கொண்டுவிட்டதற்குப் பிறகு அப்பேர்ப்பெற்ற ஒரு சிந்தனை யாளரை அழைத்து தஞ்சை நூலக ஆணைக்குழு, அவருக்கு பாராட்டுத் தெரிவிப்பது எல்லா வகையிலும் சரியானது என்பதை உணர்ந்தோம்!

அய்யா அவர்களைக் கண்டு கேட்டோம். ஒப்புதல் தந்தார்கள். அத்துடன் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளையும் கொண்டாடுவது, அய்யா அவர்களின் திருக்கரத்தால் மாண்புமிகு தமிழக முதல்வர், தமிழவேள், டாக்டர் கலைஞர் அவர்களின் உருவப்படத்தையும் திறந்து வைப்பது, மற்றும் நூலக ஆணைக்குழு உறுப்பினர்கட்கு "அடையாளச் சீட்டு" வழங்குவது, மேலும் விழா பற்றி ஒரு மலர் வெளியிடுவது என்றும் முடிவெடுத்தோம்.

எங்களது வேண்டுகோளை ஏற்று பாராட்டுக்களைப் பெற்றுக்கொள்ள இசைவு தந்தும், விழாவிற்கு வருகை தந்து தமிழக முதல்வர் அவர்களின் உருவப்படத்தைத் திறந்து வைத்து அறிவுரையும்—அறவுரையும் வழங்கி எங்களது நூலக ஆணைக்குழு உறுப்பினர்கட்கு அடையாளச் சீட்டுகளை தனது பொன்னான கரத்தால் வழங்கியும் சிறப்பித்தமைக்கு தஞ்சை மாவட்ட நூலக ஆணைக்குழு தந்தை பெரியார் அவர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

தஞ்சை நகரத் தந்தை மதிப்பிற்குரிய திரு. எஸ். பெத்தண்ணன் அவர்கள் எப்போதும் தஞ்சை நூலக ஆணைக்குழுவின் வளர்ச்சியில், முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை காட்டி வருபவர். அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்க ஒப்புதல் தந்தார்கள்.

தனது முன்னிலையில் விழா எடுக்க தஞ்சை மாவட்ட தி. மு. க. (பொறுப்பு) செயலாளர், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தின் பெருந் தலைவர் திரு. இரா. இராசன் அவர்கள் தனக்கிருக்கின்ற பல்வேறு அலுவல்களுக்கிடையே இசைவு தந்தார்கள்.

மலர் வெளியிட தகுதியானவர்—எவர் என்று நாங்கள் எண்ணியபோது திராவிடரக் கழகத்தின் பொதுச் செயலாளர், தமிழ் மக்களின் உயிர்போன்ற "விடுதலை" ஏட்டின் ஆசிரியர் திரு. கி. வீரமணி, எம். ஏ., பி. எல், அவர்கள்தான் நினைவிற்கு வந்தார். அவரைக் கேட்டோம்—வருவதாகச் சொன்னார்! வந்தார்!! இப்போது அவர் வெளியிட்டதால் 'மலர்'' மேலும் மணம் பெறுகிறது!

விழாவில் பங்கேற்றும், அய்யா அவர்களைப் பாராட்டி உரைத்தும், எல்லா நிகழ்ச்சிகளிலும் கடைசி வரை இருந்தும் சிறப்பிக்க வேண்டும் என்று தஞ்சை சட்டப் பேரவை உறுப்பினர் திரு. எஸ். நடராசன் அவர்கள், ஊரத்தநாடு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. எல். கணேசன், பி. ஏ., பி. எல்., அவர்கள், திருவையாறு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கோ. இளங்கோவன், பி. ஏ., பி. டி., அவர்கள் ஆகிய மூன்று சட்டப் பேரவை உறுப்பினர்களையும் கேட்டபோது எந்த மறுப்பும் உரைக்காமல் வருவதாகச் சொன்னார்கள், வந்தார்கள்.

மற்றும் மலருக்குக் கட்டுரை கேட்டு எழுதியதில்

1. திரு. தமிழ்வாணன், கல்கண்டு ஆசிரியர்
2. கவிஞர் கோ. கோவை இளஞ்சேரன்,
   அமைச்சர், நாகைத் தமிழ்ச்சங்கம்
3. திரு. புலவர் அறிவொளி,
   விரிவுரையாளர், பூம்புகார்ப் பேரவைக் கல்லூரி
4. திரு க. சோமசுந்தரம்,
   செயலாளர், தமிழ் எழுத்தாளர், கூட்டுறவுச் சங்கம்,
   "தமிழ் உறவு" ஆசிரியர்
5. திரு. ஏ. எம். சுந்தரராஜன், பி. ஏ., டி. எல். எஸ்.,
   நூலகர், கன்னிமாரா நூலகம், சென்னை.
6. திரு. கவிஞர் ஆலந்தூர் மோகனரங்கன்
7. திரு. இரெ. மகாலிங்கம், விளம்பர உதவியாளர்,
   மக்கள் தொடர்பு அலுவலகம், தஞ்சை.
8. திரு. இரா. தனசேகரன்,
   முன்னாள் நூலக வாசகர் மன்றச் செயலாளர்,
   முத்துப்பேட்டை

ஆகியோர் சிறப்பாக எழுதிக்கொடுத்து உதவினர்கள்.

தமிழ் நாட்டரசு மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி அவர்களும் தமிழ்நாடு பொது நூலக இயக்குநர் – நூலகத்துறைக்கு நல்வழி காட்ட வந்த வித்தகர் திரு. வே. தில்லைநாயகம், எம். ஏ., எம். எல். எஸ்ஸி., எல். டி., அவர்களும் வாழ்த்துரை தந்து சிறப்பித்தார்கள்.

மேலும் ஏனைய மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவர்கள், மாவட்ட மைய நூலகர்கள் ஆகிய அனைவரும் வாழ்த்து அனுப்பினர்.

அழகிய முறையில்—கண் கவரத்தக்க வகையில் தஞ்சை மகாலிங்கம் அச்சகத்தினர் "மலர்" அச்சடித்து தந்தார்கள். மலர் நல்ல முறையில் மலர மிகுந்த அளவிற்குப் பாடுபட்டார், மாவட்ட நூலக ஆணைக்குழுவின் மத்திய அலுவலகத்தின் தலைமை எழுத்தர் திரு. ந. வரதராசன் அவர்கள்.

மலருக்கு நூல் வெளியீட்டாளர்களும். மற்றும் சிலரும் விளம்பரம் தந்து உதவினர்கள். அனைவர்க்கும் தஞ்சை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் சார்பில் நன்றி தெரிவித்து-வணங்கி மகிழ்கிறோம்!

வாழ்க தந்தை பெரியார்!
வெல்க நூலக இயக்கம்!!

அன்புள்ள,

ந. தருமலிங்கம்,
தலைவர்,
மாவட்ட நூலக ஆணைக்குழு, தஞ்சாவூர்.

தஞ்சாவூர்,
4—10—73.

தஞ்சை மாவட்ட நூலக ஆணைக்குழு செயலர் பொது அறிக்கை.

திரு. இல. இராமச்சந்திரன், பி. ஏ., எல். டி.,
மாவட்டக் கல்வி அதிகாரி, மேலத்தஞ்சை & செயலாளர்,
மாவட்ட நூலக ஆணைக்குழு, தஞ்சை.

தோற்றமும், அமைப்பும்:

1948-ஆம் ஆண்டு தமிழ்நாடு நூலகச் சட்டப்படி 2—7—50-ல் இந்நூலக ஆணைக்குழு தோற்றுவிக்கப்பெற்றது. இவ்வாணைக்குழு பல்வேறு துறைகளில் பணிபுரியும் பெரியவர்கள் அனைவரையும் உறுப்பினர்களாகப்பெற்று மக்களின் அறிவுப்பசியைப் போக்க அவ்வப்போது கூடி இம்மாவட்டத்தில் நூலகப் பணியை சிறப்புற நடாத்தி வருகிறது.

இந்நூலக ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்.

1.	அரசினரால் நியமிக்கப்பெறுவோர்	10
2	வட்ட உறுப்பினர்கள்	12
3.	நகராட்சி உறுப்பினர்கள்	8
4	செயலர் (மாவட்டக் கல்வி அதிகாரி)	1
		31

என்ற விபரப்படி நியமிக்கப்பெற்று இவ்வுறுப்பினர்களில் ஒருவரைத் தலைவராகவும், மாவட்டக் கல்வி அதிகாரி இக்குழுவின் செயலாளராகவும் இருந்து நூலகப்பணி இம்மாவட்டத்தில் செழிப்புற செயல்பட்டு வருகிறது. இம்முறையில் முத்துப்பேட்டை திரு. ந. தருமலிங்கம் அவர்கள் கடந்த 3—12—69 முதல் இந்நாள் வரை நூலக ஆணைக்குழுத் தலைவராக பொறுப்பேற்று சீரிய முறையில் செயல்புரிந்து வருகிறார்கள்.

அத்துடன் இக்குழு புத்தக உட்குழு, கட்டிட உட்குழு, ஒப்பந்த உட்குழு என்ற முப்பிரிவாக பிரிக்கப்பெற்று நூலக ஆணைக்குழுவின் பல்வேறு தேவைகளையும் மக்கள் நலத்துடன் இணைத்து செயல்பட்டு வருகிறது.

வருவாய்

இக்குழுவின் மிக முக்கிய வருவாய் நகர்மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஊராட்சி மன்றங்கள் ஆகிய உள்ளாட்சித்துறையினர் நூலக வரி மூலம் ரூபாய்க்கு 5 காசுகள் வீதம் வசூலிக்கும் தொகையும், இதற்கு ஈடாக அரசினர் அளிக்கும் சம அளவு ஈட்டுத் தொகையுமே (equal contribution) ஆகும்.

பணி

இம்மாவட்டத்தில் தற்போது 5000 மக்கள் தொகைக்கு மேற்பட்ட 83 ஊர்களிலும், 4000 மக்கள் தொகைக்கு மேற்பட்ட 24 ஊர்களிலும் கிளை நூலகங்கள் திறக்கப்பெற்று, மொத்தத்தில் 107 நூலகங்களைத் தன்னகத்தே பெற்று பெருமையுடன் திகழ்கிறது.

சிறப்புப் பணிகள்:

''பெண்கள் நாட்டின் கண்கள்'' எனப் பேச்சளவில் மட்டுமின்றி அவர்களது முன்னேற்றம் பெரிதும் போற்றப் படும் இற்றைநாளில், அவர்களுக்கென தனியே ஒரு நூலகப் பிரிவு அமைத்து, அத்துடன் இந்நாட்டின் வருங்காலச் சந்ததிகளான இளஞ்சிறார்கள் பயின்று பயன்பெறத்தக்க சிறந்ததொரு நூலகத்தையும் மாவட்ட மைய நூலகத்தோடு மகளிர் மற்றும் குழந்தைகள் பிரிவு என்ற பெயரில் இணைத்து மிகச் சிறந்த முறையில் செயல்படுத்தி வருகிறது.

மருத்துவமனை நூலகப் பிரிவு:

மருத்துவ மனையில் நோய்வாய்ப் பெற்று சிகிச்சைப் பெறும் நோயாளிகளுக்கு அவரது உடல் நோயைப் போக்க மருத்துவர்கள் ஒருபுறம் மட்டுமின்றி, அவர்களது அறிவுப் பசியைப் போக்க மருத்துவமனை நூலகப்பிரிவும், தனது சீரிய பங்கைச் செலுத்தி இக்குழு தனது பணியில் மேலும் ஒரு சிறப்பைப் பெற்றுத் திகழ்கிறது.

புதிய திட்டங்கள்:

தற்போது இந்நூலக ஆணைக்குழுவில் செயல்படும் எல்லா நூலகங்களும் வாடகைக் கட்டிடங்களிலேயே செயல் படுகின்றன. இதனால் ஆண்டுக்கு ரூ. 40,000 செலவாகிறது. இப்பொருட் செலவைத் தடுக்கும் முறையில் பெரிதும் முயன்று இக்குழு கட்டிடத்திற்கு இலவச மனையும், கட்டிடச் செலவில் கால் பங்கையும் மான்யமாகத் தரும் இடங்களில் கிளை நூலகக் கட்டிடங்கள் கட்ட திட்டமிட்டு'' அதன்படி நில நன்கொடை மற்றும் பங்குத்தொகை ஆகியவை முதன் முதலில் தந்த பெருமகளூரில் கிளை நூலகத்திற்கென சொந்த கட்டிடம் கட்டப்பெற்றுள்ளது. அடுத்து பட்டுக்கோட்டை, கிளை நூலகத்திற்கு தமிழக பொது நூலக இயக்குநர் மதிப்பிற் குரிய திரு. வே. தில்லைநாயகம் அவர்களாலும், திருத்துறைப் பூண்டி கிளை நூலகத்திற்கு திருத்துறைப்பூண்டித் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் மணலி திரு. சி. கந்தசாமி அவர் களாலும் கால்கோள் விழாக்கள் முடிக்கப்பெற்று, கட்டிடம் விரைவில் எழுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பெறுகின்றன.

இதுபோன்று இலவச கட்டிட மனையும், கட்டிடச் செலவில் கால்பங்குத் தொகையும் தந்துதவும், நன்கொடை களை இந்நூலக ஆணைக்குழு நன்றியுடன் ஏற்று, என்றும் நூலக முன்னேற்றத்திற்கு செயல்படக் காத்துள்ளது.

நூலக வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதது நிதியா கும், இந்நிதியை தமிழக அரசு காலத்தில் தந்து உதவுகிறது. எனினும் "ஒரு கையால் ஓசை" எழும்பாது ஆதலால், பொது மக்கள் நூலகப் பணி இம்மாவட்டத்தில் சிறக்க அவர்களது பங்கையும் செலுத்த முன்வரவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

வளர்க நூலகம்!

பண்பாளர் காக்கும் நூலகம்.

திரு. ஆ. அருணாசலம், பி. ஏ., டி. எல். எஸ்.,
நூலகர், மைய நூலகம், தஞ்சை.

சிறந்த புத்தகங்களையும், ஏட்டுச் சுவடிகளையும் தேடிக் கண்டு பிடித்து, அவைகளைப் பாதுகாக்க நமது முன்னோர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலபல. டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள் மறைந்து கிடந்தச் சங்க இலக்கிய ஏடுகளை வெளிக் கொணர எடுத்துக்கொண்ட முயற்சிகளை நாம் பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம். திரு. சாமிநாத அய்யர் அவர்கள் தனது முதுமைப் பருவத்தில் பல கிராமங்களுக்கு நடந்து சென்றே மறைந்து கிடந்த சங்க இலக்கிய ஏடுகளை வெளிக் கொணரும் முயற்சிகளை மேற்கொண்டு, அதில் வெற்றியும் பெற்றார். சீன யாத்திரிகர் பாஹியான் அவர்களைப் பற்றி ஒரு வரலாறு உண்டு. பாஹியான் நமது நாட்டின் பல பாகங்களுக்குச் சென்று அங்கு கிடைத்த அரும் பெரும் ஏட்டுச் சுவடிகளையெல்லாம் திரட்டி அவைகளை மரக் கலத்திலே ஏற்றிக்கொண்டு கடல் வழியாக சீன நாட்டிற்குப் புறப்பட்டார். நடுவழியில் மரக்கலத்தினுள் தண்ணீர் புகுந்து, மரக்கலம் கவிழக்கூடிய நிலை ஏற்பட்டது. கலத்தைச் செலுத்திச் சென்ற மாலுமிகள் மரக்கலத்திலுள்ள சுமை குறைக்கப்பட வேண்டும், எனவே ஓலைச் சுவடிகளை கடலிலே எறிந்துவிட வேண்டும் என்று கூறினார்கள். மாலுமிகளின் இந்தக்கூற்றை பாஹியான் ஏற்றுக்கொள்ளவில்லை. அரும் பெரும் பொக்கிஷங்களாகத் தான் கருதிய ஓலைச் சுவடிகளை இழக்க அவர் மனம் ஒப்பவில்லை. எனவே மாலுமிகளிடம், கலத்திலுள்ள சுமை குறைக்கப்பட வேண்டுமானால் தான் கடலில் குதித்து விடுவதாகவும், ஓலைச் சுவடிகளைக் கடலில் போடவேண்டாமென்றும் கூறினாராம். இச்சம்பவம் அறிஞர்கள் அரும்பெரும் பொக்கிஷங்களான ஓலைச்சுவடிகளையும், புத்தகங்களையும் சேகரிக்க, அவைகளைப் பாதுகாக்க எடுத்துக் கொண்ட முயற்சிகளை உணர்த்துபவைகளாக உள்ளன.

ஆண்டுதோறும் இலட்சக் கணக்கான புத்தகங்கள் வெளிவருகின்றன. தனி நபர் எவரும் இவைகளைச் சொந்தமாக வாங்கி வைத்துக்கொள்ள இயலாது. எனவே நூலகங்கள்தான் ஆண்டுதோறும் வெளிவரும் புத்தகங்களைச்

சேகரித்து வைக்க வேண்டும். ஆண்டு தோறும் புதிது புதிதாக புத்தகங்கள் சேகரிக்கப்படுவதால் நூலகக் கட்டிடங்கள் பிற்காலத் தேவைக்கேற்றபடி கட்டப்பட வேண்டும். பெரும்பாலான நூலகங்களுக்கு நல்ல கட்டிடங்கள் அமையவில்லை. இக்குறையைப் போக்க நூலக ஆணைக்குழுவும், தமிழக அரசும் நூலகங்களுக்கு கட்டிடங்கள் கட்டும் முயற்சியினை மேற்கொண்டுள்ளன. இம்முயற்சியில் பொதுமக்களும் பங்குகொள்ள வேண்டும். பொதுமக்கள் பங்கு கொள்ளாத எந்த முயற்சியும் வெற்றி பெறுவதில்லை. பொதுமக்கள் நூலக கட்டிடங்கள் கட்ட மனை தரவேண்டும். நிதி உதவி அளிக்க வேண்டும். கொடை உள்ளம் கொண்ட நல்லவர்கள் நமது நாட்டில் நிறைய உண்டு. அவர்களெல்லாம் இப்பெரும் பணிக்கு உதவுவது, நூலகப்பணி நம்மாவட்டத்தில் மென்மேலும் உயர உறுதுணையாக அமையும்.

"தாலி ஏன் கட்டவேண்டும்? என்றால் விலையான மாடு என்று தெரிய வேண்டும் என்கிறார்கள் அப்படியானால் ஆண்களும் கட்டிக்கொள்ளட்டுமே!"

—*தந்தை பெரியார்.*

* * *

"பெண்களுக்கு ஆண்களால் தொல்லை வரும் என்றால் ஆளுக்கொரு கத்தியை இடுப்பில் வைத்துக்கொள்ள வேண்டும்!" —*தந்தை பெரியார்.*

* * *

"இந்து மதமும் சாதிகளும் இருக்கின்ற வரை தீண்டாமை ஒழியாது. —*தந்தை பெரியார்.*

* * *

"சாதிபேதம், பிரிவு ஆகியவை ஒழிந்தால்தான் சமூக வாழ்க்கையில் சமதர்மமாய் மனிதன் வாழமுடியும்!"

—*தந்தை பெரியார்.*

* * *

புத்தகம்-ஒரு விளக்கம்!

மாண்புமிகு டாக்டர் கலைஞர்.

"அண்ணாவே நூலகமாகத் திகழ்ந்தார் எனவே...
நூலகத்தில் அண்ணாபடம் திறப்பது மெத்த சிறந்தது"

நூலகங்களில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படங்களை வைப்பதில் எத்துணைப் பொருத்தமிருக்கும் என்பதனை நான் விளக்கத் தேவையில்லை!

அதுவும் இங்கே திறந்து வைக்கப்பட்டிருக்கிற படம் அண்ணா அவர்கள் தமது வாழ்க்கை முழுவதும் படித்துக் கொண்டே இருந்தார் என்பதனை விளக்குகின்ற படமாகும்.

அண்ணா அவர்கள் அமெரிக்காவிலுள்ள யேல் பல்கலைக் கழகத்தின் அழைப்பை யேற்று அங்கே சென்ற காலை நூலொன்றினைப் படித்துக் கொண்டிருக்க அதையே படமெடுத்திருக்கிறார்கள். அந்தப் படம் இங்கே அலங் கரித்துக் கொண்டிருக்கிறது.

அண்ணா அவர்கள் படித்துக் கொண்டிருந்தபோதும் படித்து முடித்து பொது வாழ்வில் ஈடுபட்ட பின்பும் கல்லூரிப் படிப்போடு படிப்பு முடிந்தது என்று கருதாமல்–பள்ளியிலும்–கல்லூரியிலும்–கலாசாலையிலும் படித்ததோடு படிப்பு முடிந்தது என்றில்லாமல் தொடர்ந்து படித்துக் கொண்டே இருக்கவேண்டும் என்ற தத்துவத்தின் அடிப்படையில் தாம் மறையும் வரை படித்துக்கொண்டே இருந்தார்கள்.

அடையாறு மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவதற்கு சில நிமிட நேரங்களுக்கு முன்புகூட தாம் படித்துக் கொண்டிருந்த நூலில் மிச்சமுள்ள ஐந்தாறு பக்கங்களை படித்து விட்டு வருவதாக மருத்துவர்களிடம் சொல்லி அனுமதி கேட்டுக்கொண்டு அதையும் படித்து முடித்து விட்டு அறுவைச் சிகிச்சைக்கு சென்றார்கள்.

அதற்குப் பிறகு எதையும் படிக்க அவர் தமது கண்களை விழிக்கவே இல்லை. அப்படி தமது இறுதி யாத்திரை வரை படிப்பு படிப்பு படிப்பு என்றிருந்தவர் அண்ணா அவர்கள் தாம் படிக்காத நூல்களே இருக்கக்கூடாது எனுமளவுக்கு அவர் படித்தார்.

ஆப்ரகாம் லிங்கனைப் போல்

ஆப்ரகாம் லிங்கனைப் பற்றிக் கூறுவார்கள். லிங்கன் அமெரிக்க நாட்டின் அதிபராவதற்கு முன்பும் அதிபராக இருந்து மறையும் வரையும் அவர் வாழ்ந்த பகுதியின் 50 மைல் சுற்றளவில் எந்த நூல் நிலையத்திலும் அவர் படிக்காத நூலே கிடையாது எனும் செய்தியை உள்ளடக்கிய நூல்வரையும் அண்ணு படித்திருக்கிறூர்.

அப்படி அண்ணு அவர்கள் படித்ததன் விளைவாக அந்த நூல்களில் கண்ட உலகம்–அந்த நூல்களினுல் பெற்ற கல்வி–அந்த நூல்களில் கண்ட வரலாற்றுப் பூசல்கள்–தத்துவஞானிகள்–விஞ்ஞான மேதைகள்–நாடு நகரங்கள்–பட்டி தொட்டிகள்–பழங்காலச் சீமைகள் இவைகள்தான் அண்ணுவைப் பல்கலைக் கழகமாக ஆக்கியது.

அப்படிப்பட்ட அண்ணு அவர்களின் படத்தை நூலகத்தில் திறந்து வைப்பது நாமும் நிறைய நூல்களைப் படிக்க வேண்டும்; படிப்பார்வத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்ற சூளுரையை எடுத்துக்கொள்ள உதவுவதாகும்.

''வீட்டுக்கு வீடு புத்தகசாலை அமையப்பெற வேண்டும்'' என்ற முறையில் வீட்டுக்கு ஒரு புத்தகசாலை என்ற பேச்சையே பேசினுர்.

நான் பொதுவாக புத்தகங்கள் என்று கூறினேன். பொதுவாக நூலகங்களில் எப்படிப்பட்ட புத்தகங்களெல்லாம் இருக்கவேண்டும் என்ற பிரச்னையில் நான் இறங்கவில்லை. ஏனெனில் இதே பந்தலில் ஒரு சாராருக்கு இருக்கும் ரசனை மற்றவர்களுக்கு இருப்பதில்லை. பலவிதக் கருத்துக்களைப் படிக்கிறூர்கள்–பலவிதமான ரசனை உள்ளவர்கள் இருக்கிறூர்கள்.

எல்லாவகை புத்தகத்தை வாங்கிப் படிப்பதில் தவறில்லை. ஒரு புத்தகத்தைப் படித்தால் இன்ஞெரு புத்தகத்தைத் தாக்குவது - இன்ஞெரு புத்தகத்தைப் பற்றிய ஆராய்ச்சி செய்வது–விமர்சனம் செய்வது என்ற நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நூல்களைப் படிப்பது தவறில்லை. எல்லாவற்றையும் படிக்க வேண்டும்.

அப்போதுதான் தெளிவான அறிவு பெறமுடியும்—துணிவான கருத்துக்கள் கிடைத்திடத்தக்க நிலை உருவாகவும் முடியும்.

மத்திய நூல் நிலையத்தினர் கோரிக்கைகளை விடுத்திருக்கிறார்கள். "பணம் போதவில்லை; நிரம்ப நூல்களை வாங்கி படிக்கத் தர முடியவில்லை!" என்று முறையிட்டிருக்கிறார்கள்.

நூல்பல படிக்கும் ஆர்வம்-மக்களிடம் பெருக வேண்டும்!

அமைச்சர்கள் வருகிறார்கள் என்றால் கோரிக்கைகளுக்குப் பஞ்சமில்லை. அதில் பணப்பிரச்னை எழாவிட்டால் அதனைக் கோரிக்கை என்றும் சொல்ல முடியாது.

கோரிக்கை யில்லாத வரவேற்பு

ஜோடி இல்லாத மாடப்புறவும்--சேடி இல்லாத ராஜகுமாரியும் இல்லை என்று அண்ணா அவர்கள் ஒரு படத்தில் அழகானதொரு வசனம் எழுதினார்.

அதுபோல் கோரிக்கையில்லாமல் அமைச்சருக்கு வரவேற்பு இருப்பதில்லை.

பணம் அதிகமாக ஒதுக்க வேண்டும் என்பதனை வெளிப்படையாகச் சொல்லாமல் நண்பர் தருமலிங்கம் ரகசியமாக என்னிடம் தெரிவித்தார்.

உள்ளாட்சித் துறையினரும்-ஊராட்சி-நகராட்சி மன்றங்களும் 3 காசு வீதம் நூலக வரி விதித்து அதை மாவட்ட நூலகத்திற்குத் தருகிறார்கள், மாவட்ட நூலகம் மேற்கொண்டு தேவையானதைச் செய்கிறது.

எவ்வளவு பணம் மாவட்ட நூலகம் இதற்கென செலவிடுகிறதோ அதே அளவுக்கு அரசாங்கமும் உதவியளித்து வருகிறது.

ஊராட்சிகளும்—நகராட்சிகளும் 10 லட்ச ரூபாய் தருமானால் மாவட்ட நூலகம் குறிப்பிட்ட தொகை திரட்டுமானால் அதே அளவுத் தொகையை அரசும் தருகிறது. இந்த முறையான பழக்கத்திலிருந்து இந்த அரசு என்றும் பின் வாங்காது.

ஒரு லட்ச ரூபாய் வசூலித்துத் தருவார்களானல் அதே அளவுக்கு அரசும் தரும். ஒன்றரை லட்சம் தருவார்களானலும்-இரண்டு லட்சம் தருவார்களானலும் அதே அளவு அரசினராலும் தரப்படும். ஆகவே இதன் நிர்வாகத்தினர் ஊக்கமுடன் பணியாற்றி எவ்வளவு பணம் சேர்க்கிருர்களோ அந்த அளவுக்கு அரசும் தரும்.

3 காசாக வசூலிக்கப்படும் நூலக வரியை 5 காசாக ஆக்க வேண்டுமென்ற அனுமதி கேட்டு கோரிக்கையை விடுத்தார்கள். இப்போது இதற்காக 3 காசு வரியைத் தருவதற்கு கிராமத்து மக்கள் திணறுகிருர்கள். அவர்களுக்கு கசப்பு ஏற்பட்டிருக்கிறது இந்த நிலேயில் 3 காசை 5 காசாக உயர்த்தவேண்டும் என்ற கோரிக்கையை தற்காலிகமாக ஏற்பதற்கில்லே என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களாகப் பார்த்து '3 காசுதான நூலக வரி? எழிலான நூலகங்கள் தேவையல்லவா? ஏன் அக்கரையற்றிருக்கிறீர்கள்? 5 காசாக உயர்த்துங்கள்!'' என்று தாங்களாகவே தருவதற்கு முன் வருவார்களானல் அப்போது இந்தக் கோரிக்கைக்கு அனுமதி தரலாம்.

சிறுகக் கட்டி பெருக வாழ் என்பதற்கேற்ப இப்போது வரியாக விதித்திருக்கிற 3 காசை ஒழுங்காக வசூலித்தால் போதும் அப்படி வசூலிப்பதற்கு உற்சாகம் காட்டவேண்டும். இந்த மூன்று காசை ஒழுங்காகப் பெற்ருலே எதிர்பார்த்த அளவுக்கு வசதிகளேப் பெறமுடியும்.

நூல்களேப் படிக்க வேண்டும் என்கிற ஆர்வமும் மக்களிடையே ஏற்படவேண்டும்.

பழைய காலத்தில் படிக்காத பெரியவர்களெல்லாம் படித்தவர்களே அழைத்து வைத்துக்கொண்டு புத்தகங்களேப் படிக்கச் செய்து அதைக் கேட்டு 'ஆகா' என்று தலேயாட்டி ரசித்துக் கொண்டிருப்பார்கள். என் சொந்தக் கிராமத்திலேயே இளமைக் காலத்திலேயே இப்படி நடந்ததைக் கண்டிருக்கிறேன்.

அப்படிக் கேட்டவர்களில் அந்தக் காலத்தில் மிக இளைய வயதினனான நானும் அமர்ந்து கேட்டிருக்கிறேன். அப்படிப் படித்தவனுக்குத்தான் எத்தனை கிராக்கி! அந்த நிலையெல்லாம் மாறி இன்றையத் தினம் படிக்கிறவர்களின் எண்ணிக்கை கிராமப்புறங்களிலேயே பெருகி வருகிறது.

படித்தவர்களிலேயே சிலர் இதை ஏன் படிக்கவேண்டும்? என்ன இருக்கப் போகிறது என்று சோம்பேறித் தனத்தால் படிக்காமல் இருக்கிறார்கள்.

"நமக்குத் தெரியாதா? இவன் எதை எழுதியிருக்கப் போகிறான்? என்று அலட்சியப் படுத்துகிறவர்களும் - வாய்ப்புக் கிடைத்தால் இதைவிட நம்மாலே புதிய புதிய புத்தகங்களை எழுத தெம்பு இருக்கிறது என்று எண்ணுபவர்களும் இருக்கிறார்கள்.

இவற்றுக்கெல்லாம் மேலாக பல்வேறு சூழ்நிலைகள் - நாட்டின் பல்வேறு நிலவரங்கள் புத்தகத்தைப் படிக்கத் தடையாக இருக்கின்றன.

தஞ்சையைப் பொறுத்த வரையில் 105 நூல் நிலையங்கள் இருக்கின்றன. இவற்றிலே வந்து படித்துச் செல்பவர்களும் இருக்கிறார்கள். எடுத்துச்சென்று படித்துவிட்டுத் தருபவர்களும் இருக்கிறார்கள்.

வீட்டுக்கொரு புத்தகசாலை இருக்கவேண்டும் என்ற முறையில் புத்தகங்களை எடுத்துச்செல்கிறவர்கள் தாமே வைத்துக்கொள்வது போன்ற தவறுகளும் செய்கிறார்கள்.

தங்கமா? வெள்ளியா? உருக்கி வேறு பொருள் செய்து கொள்வதற்கு? வெறும் காகிதமாகத்தான் அதைப் பயன்படுத்திக்கொள்ளமுடியும்! ஆனால் புத்தகமாக இருந்து ஒருவர் கண்ணில் பட்டு அவர் படித்தால் சிந்தனை தெறிக்கப் பயன்படும். இப்படி நான் சொல்வதைப் பயன் படுத்திக் கொண்டு நூலகத்திலிருந்து வாங்கிய புத்தகங்களைத் தராமலிருக்க முதல்வரே காரணம் கூறிவிட்டார் என்று தவறுக்கு இடம் கொடுத்துவிடக்கூடாது.

நாம் எல்லாம் சேர்ந்ததுதான் நாடு — நாமெல்லாம் சேர்ந்ததுதான் சமுதாம் நாமே ஒன்றுபட்டு உருவாக்கியது தான் இந்த நாடு. ஆகவே எந்தக் காரியத்தையும் பொது தன்மைக்குகந்த வகையில் செய்து ஒத்துழைத்திட வேண்டும்.

மறைமலை அடிகளார் நூலகம்

சான்றோர்களும் — ஆன்றோர்களும் — புலவர்களும் தாம் படித்த நூல்களை இனிமேல் படிக்கப் போவதில்லை என்று கருதுகின்ற நூல்களை நூலகங்களுக்கு நன்கொடையாகத் தரவேண்டும். இப்போதும் அப்படி வருகிறது — அது போதாது.

அப்படி நன்கொடை தருவார்களானால் தரப்படுவது பத்து இருபது நூல்களென்றால் அதிலே நன்கொடை தந்தவர்களின் பெயரை எழுதலாம்.

ஆயிரக்கணக்கான நூல்களாக இருந்தால் அவற்றை வைக்கின்ற பேழைப் பகுதிக்கே தந்தவரின் பெயரை வைக்கலாம்.

நாம் கேள்விப் பட்டிருக்கிறோம். மறைமலையடிகள் இறந்ததும் அவர் படித்த பண்டைய நூல்களெல்லாம் அவரது பல்லாவரம் வீட்டில் இருந்ததாம். அவை பொது நூலகத்திலே வைக்கப்பட்டு பல்லாயிரக் கணக்கான மக்கள் படித்துப் பயன் பெற்று வருகிறார்கள்.

தாம் மட்டுமின்றித் தம் குடும்பத்தினரும் — நண்பர்களும் படித்து முடித்த பிறகு, அவற்றை நூல் நிலையத்தில் சேர்க்க வேண்டும்.

அப்போதுதான் படிப்பதற்கு வசதியில்லாதவர்களும் படிக்கின்ற வாய்ப்பைப் பெறமுடியும்.

இந்த எண்ணம் ஒவ்வொரு குடி மகனுக்கும் — தமிழ்ப் பெருங்குடி மகனுக்கும் தோன்றுமானால் நூல் நிலையத்திற்கு அதிகப் பணம் வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்கும் நிலை இருக்காது!

புதிய கருத்துக்களை மக்கள் மனதிலே பதியவைக்க வேண்டும் என்பதனை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது அதே நேரத்தில் அதிகப்பணம் ஒதுக்க அரசின் நிதிநிலை இடந் தராத நிலையையும் பார்க்க வேண்டும்.

இங்கே இருக்கின்ற 105 நூலகங்களில் இரண்டொன்று தான் சொந்தக் கட்டிடத்தில் இருக்கின்றன. சில பழைய கட்டிடங்களிலேயே இருக்கின்றன. பெரும்பாலும் வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றன.

நூல் நிலையங்களெல்லாம் நல்ல இடங்களில் சொந்தக் கட்டிடத்தில் இருக்கவேண்டும்.

அனைவரும் உதவுவீர்

தனிப்பட்ட ஒவ்வொரு தமிழ் மகனும் நூல் நிலையங்களுக்கு உதவி செய்தால்தான் உத்வேகம் ஏற்பட முடியும்.

ஆளுக்கொரு புத்தகம் நூல் நிலையங்களுக்குத் தர முன் வரவேண்டும்.

குறிப்பிட்ட நூலகத்திற்குத்தான் என்றில்லாமல் எல்லா பொது நூல் நிலையத்திற்கும் அனுப்பலாம். நூலகங்களின் பட்டியலை இங்கிருந்தேகூட வாங்கிச் செல்லலாம்.

நான் அடுத்த முறை இங்கே வருகிற நேரத்தில் நூலக ஆணைக்குழுத் தலைவர் தர்மலிங்கம் "என்னுடைய கோரிக்கைக்கு உங்களிடத்திலே பலன் கிடைக்கவில்லை. ஆனால் உங்கள் பேச்சைக்கேட்ட மக்களால் பயன் கிடைத்திருக்கிறது" என்ற பதிலைத் தரவேண்டும்.

மீண்டும் சொல்கிறேன். அண்ணா அவர்களின் படம் இங்கே திறக்கப்பட்டிருப்பது மெத்தச் சிறப்புடையது.

அண்ணாவே நூலகமாகத் திகழ்ந்தார்கள். அந்த முறையில் நூல்களைப் படித்துப் படித்து அவர் நடமாடும் பல்கலைக் கழகமாகவே இருந்தார்கள்.

பிறந்த மனிதனுக்கு உள்ளம் இருக்கிறது. ஆனால் புத்தகம் படிப்பதன்மூலம்தான் புதிய உள்ளம் பெறுகிறான். ஆக, புதிய உள்ளம்—புத்தகம் பெறுவதற்குப் புத்தகம் தேவைப்படுகிறது புதிய அகத்தை உருவாக்குவதுதான் புத்தகமாகும்!

(11—2—70 அன்று தஞ்சை மத்திய நூலகத்தில் பேரறிஞர் அண்ணாவின் திரு உருவப் படத்திறப்பின் போது தமிழக முதல்வர் மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய பேருரை.)

தையற் கலையின் - வாழ்த்து !

கலைத்தொழில், கைவண்ணப்பொருள்களுக்கு உலக மெங்கும், சீரும் சிறப்பும், புகழும், பெற்றுத் திகழும் தஞ்சைத் தரணி, கலைஞர்களுக்கு எல்லாம் தாயகமாக திகழ்கின்றது என்றால் மிகையாகாது.

கலைஞர்களுக்கெல்லாம் தலைமகனாய் திகழும், நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைத் தந்ததும் இதே தஞ்சைத்தரணிதான். தஞ்சை மாவட்டத்தை நான் கலை இல்லம் என்றே கருதுகின்றேன்.

இத்தகைய சீரும், சிறப்பும், புகழும், பெருமையும் தன்னகத்தே கொண்ட தஞ்சைத்தரணியில் நான் பிறக்காவிட்டாலும், நமது அருமை அமரர் அண்ணாவின் தம்பிகள் பலர் எனது உற்ற நண்பர்களாக உள்ளனர். அவர்களில் புன்னகை பூத்த முகத்தோடு என்றும் அண்ணே என்று அழைப்பவர்களில் முதல்வனாக திகழ்பவர் நமது தஞ்சை மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவர் திரு. ந. தர்மலிங்கம் அவர்கள். இவரது அமைதியான முயற்சிகள் அனைத்தும் வீண்போனதில்லை. இவரது உழைப்புகள் அனைத்தும் நாட்டுக்கும் மக்களுக்கும், பயன்பட்டே வந்துள்ளது.

அருமை நண்பர் தர்மலிங்கம் அவர்கள் நூலக இயக்கத்துறையில் என்னைவிட மூன்றாண்டுகள் மூத்தவர் என்றே நான் கருதுகிறேன். இவர் எனது கருத்தை ஏற்பாரா? இல்லையா? என்பது வேறு.

நூலக இயக்க நிர்வாக இயந்திரத்தை மூன்றாண்டுகள் இயக்கிப் பார்த்தவர். பல அனுபவங்கள் இவருக்கு ஏற்பட்டு இருக்கக்கூடும். பல இன்னல்கள், இடைஞ்சல்கள், குறுக்கு நடைபோடும் அதிகாரவர்க்கம் இத்தனை சோதனைகளிலும் வெற்றிக்கண்டு வீரநடைபோட்டு வளரும் முறுக்கு மீசையுடன் திகழும் பரமசாது எனது நண்பர் தர்மலிங்கம் அவர்கள் என்பது என் கருத்து.

எனவே இவர் தந்தைக்கும், தமையனுக்கும், தமிழக முதல்வருக்கும் எடுக்கும் விழா சிறப்பான முறையில் வெற்றி அடையும் என்று மனமார வாழ்த்துகின்றேன்.

கே. பி. சுந்தரம்,
தலைவர்,
சென்னை மாநகர நூலக ஆணைக்குழு,
சென்னை–600002.

3—10—73

மூன்று முத்துக்கள்

ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

ஈரோட்டார் இல்லையெனில் இங்கே பகுத்தறிவுத்
தேரோட்டு வார்யார்? தெளிவார்யார்?—சீராட்டும்
தாயாகச் சிந்தனைகள் தான்வளர்த்த சான்றோர்க்கு
வாயால் உரைப்பதோ வாழ்த்து!

சீர்திருத்தப் பூங்காவாய் செந்தமிழர் தாயகத்தை
நீர்திருத்தி வைத்து நிலைபெற்றீர்!—ஊர்திரிந்தே
தொண்டுகிழம் ஆனாலும் தொண்டென்றால் முப்பழம்போல்
உண்டுவரு கின்றீர் உவந்து!

நெஞ்ச விளக்குக்கு நெய்யூற்றி வைத்தவரைக்
கொஞ்சுதமிழ் நாடெல்லாம் கும்பிடுமே!—அஞ்சாமல்
வெங்கொடுமை தூள்செய்த வீரத் தலைவனுக்குத்
தங்கத் தமிழ்வணக்கம் சாற்று!

கண்ணைக் காத்துவந்த அண்ணாவே, உன்பெருமை
எண்ணாத நாளெல்லாம் ஏன் பிறந்தோம்?—மண்ணாய்நீர்
போனதெல்லாம் பொய்யாம்; புனைகதையாம்; எம்முயிராய்
ஆனதுதான் உண்மையண்ணா! எம்முயிராய்

பேசா இலக்கியங்கள் பேசி மறைந்தவனின்
ஏசாத் திருநாள் இதுவன்றோ?—பூசாத
சந்தனமாய் ஏடெல்லாம் தாம்திகழ்ந்த அண்ணாவே
வந்தனைகள் செய்தோம் மகிழ்ந்து!

வில்லுக்கும் இல்லா வினையாற்றல் பேசுமிவர்
சொல்லுக்கே உண்டென்று தோள்தட்டுவோம்!—எல்லையிலா
வானம்போல் பெற்றபுகழ் வையத்தில் யார்பெறுவார்?
ஆனமட்டும் பார்த்தாலும் ஆய்ந்து!

தமிழ்ச்சொத்தே! நாட்டின் தவப்பயனாய் வாய்த்த
அமிழ்தமே! ஆற்றல் அரசே!—கமழ்மணத்தால்
நெஞ்சில் இடம்பெற்று நீங்காக் கலைஞரே!
கொஞ்சுதமிழ் காப்பதற்கே கூவு!

கன்னித் தமிழின் கலைப்பூங்கா நீரென்றே
எண்ணி மகிழ்கின்றார் இந்நாட்டார்!—எண்ணங்கள்
ஓவியம்போல் தீட்டும் உயர்கலைஞர் கைவண்ணம்
காவியமாம் என்பார்கள் கண்டு!

நீர்வாழும் காலம் நிகரற்ற பொற்காலம்!
ஊர்வாழ வாழும் உயர்மகனே!—பார்போற்றும்
நீண்ட வரலாற்றில் நின்றிருக்கும் உம்பெயரை
ஈண்டு மறப்பவரும் ஏது?

தமிழ் நலம் கருதும் தரமான
வெளியீடுகளுக்கு

செல்வி நிலையம்
சேலம்—636007.

பெரியாருக்கு நிகர் பெரியார்தான்!

திரு. தமிழ்வாணன் (கல்கண்டு ஆசிரியர்)

கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப்போக வேண்டும் என்று சொன்னார் வள்ளலார் பெருமான். அவர் சொன்னதைச் செயலாக்கினார் பெரியார். மூடப் பழக்கவழக்கங்களால் அர்த்தமற்றச் சடங்குகளால் ஜாதிப் பிரிவுகளால் நாட்டு மக்களின் அறிவும், நேரமும், பணமும் வீணாகிறதே என்று வேதனைப்பட்டார் பெரியார். இதற்கு ஒரே வழி சமூக சீர்திருத்தம்தான் என்பதை உணர்ந்தார். சமுதாய இழிவைத் துடைக்க ஒரு இயக்கத்தையே ஆரம்பித்தார் பெரியார். எதையும் தாங்கும் இதயம் கொண்ட ஒரு சில தோழர்களை அழைத்துக்கொண்டு பட்டி தொட்டிகளெல்லாம் புகுந்தார். இரவு பகல் என்று பாராமல் பகுத்தறிவு பிரச்சாரம் செய்தார். இன்று இவர் கொள்கை ஒரு பெரிய ஆலமரமாக சீர்திருத்த வாதிகளுக்கு நிழல் தந்துகொண்டிருக்கிறது.

பெரியார் பத்தாவது படிக்கவில்லை. பத்து வயதுவரை தான் படித்தார். இந்தக் குறையைப் போக்க இவர் இப்போது கல்விக்காக ஏராளமான பணத்தை செலவு செய்துகொண்டிருக்கிறார். இவர் சொந்தமாகச் சில பள்ளிகளை நிறுவினார், ஒரு கல்லூரியை ஏற்படுத்தினார். இவர் தன் கல்லூரியில் இதுவரை யாரும் பின்பற்றாத ஒரு நடைமுறைத் திட்டத்தைப் புகுத்தினார். குறைந்த மார்க்குகள் வாங்கிய மாணவர்களைப் பெரிய கல்லூரிகள் ஏற்றுக்கொள்வதில்லை. இதை மாற்றினார். குறைந்த மார்க்குகள் வாங்கிய மாணவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்ட இவர் கல்லூரியில் முதலிடம் கொடுத்தார். இதனால் பின் தங்கிய இளம் கல்வி நீரோடையில் தன் அறிவுத் தாகத்தைத் தீர்த்துக்கொள்கிறது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களெல்லாம் இப்போது பெரியார் கல்லூரியில் படித்து முன்னேறுகிறார்கள். இதனால் பெரியாரைத் தமிழர் சமுதாயம் வாழ்த்திக் கொண்டிருக்கிறது.

பெரியார், ஒரு தொண்டனாக இருந்து தலைவரானவர். ஒரு சில புதுத் தலைவர்களைப் போல் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு தலைவர் ஆனவர் அல்லர். இவருடைய தொண்டில் தூய்மை இருக்கிறது, துணிவு இருக்கிறது.

பணிவு இருக்கிறது. ஒரு சமயம் ஈரோட்டில் பிளேக் நோய் காட்டுத் தீ போல் பரவியது. இந்தக் கொள்ளை நோயால் மக்களில் சிலர் வேரற்ற மரங்களைப் போல் வீழ்ந்து மடிந்தார்கள். இந்தப் பிணங்களை அப்புறப்படுத்த யாரும் முன்வரவில்லை. பலர் அஞ்சினர். சிலர் நடுங்கினர். ஆனால் பெரியார் துணிவே துணையாகக் கொண்டு ஒவ்வொரு பிணத்தையும் தூக்கிச் சென்று சவ அடக்கம் செய்தார். நோயைக் கண்டு இவர் நடுங்கவில்லை. சாவைக் கண்டு இவர் அஞ்சவில்லை. இது சமூகத்துக்குச் செய்யவேண்டிய சேவை என்று உணர்ந்தார், செய்தார். பெரியார் காங்கிரஸில் இருந்த போது தொண்டனுக்குத் தொண்டனாய் நின்று தன் கடமைகளை நிறைவேற்றினார். கதர் இயக்கம் வரை, கதர் மூட்டைகளைத் தன் தோளிலே சுமந்து கொண்டு தெருத் தெருவாகக் கதர் துணிகளை விற்றார். காங்கிரஸ் கட்சியில் இருக்கும் வரையில் தலைமை பீடம் கட்டளையிட்ட நேரங்களிலெல்லாம் துண்டை உதரித் தோளில் போட்டுக்கொண்டு போராட்டத்தில் குதித்தார், சிறை சென்றார். ஒரு தலைவனுக்கு உள்ள தகுதிகளையெல்லாம் பெற்ற பிறகுதான் பெரியார் தலைவராக உயர்ந்தார். இன்று தலைவராக உயர்ந்திருக்கும் ஒரு சிலர் என்ன தியாகம் செய்தார்கள் என்றே புரியவில்லை. பெரியாரின் தியாகங்களை எண்ணிப் பார்க்கும்போது பெரியாருக்கு நிகர் பெரியார்தான் என்று சொல்வதைத் தவிர வேறு எதையும் சொல்ல முடியவில்லை.

பெரியார் ஒரு சிக்கனக்காரர் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் இவர் எதில் சிக்கனம் பிடிக்கிறார் என்பது அனேகருக்குத் தெரியாது. நேரத்தை இவர் வீணாக்குவதில்லை. பணத்தையும் இவர் வீணாக்குவதில்லை. இதற்கு எத்தனையோ உதாரணங்களைச் சொல்லலாம். ஒரு உதாரணம் இவர் இப்போதும் தாடி வைத்திருப்பதுதான். தினசரி முகச் சவரம் செய்துகொண்டால் நேரம் வீணாகிறது. இதனால் பணமும் செலவாகிறது. இதற்காகவே இவர் தாடி வைக்க ஆரம்பித்தார். எந்த விஷயத்திலும் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பதில் பெரியாருக்கு நிகர் பெரியார்தான். பணமும் நேரமும் நிறையச் செலவாகிறது என்பதற்காகத் தான் கடவுள், மதம், கோவில், பூஜை இவைகளை எதிர்த்துப் பிரச்சாரம் செய்கிறாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இன்றைய அரசியல்வாதிகளில் பலர் சமூகத்தில் கொஞ்சம் செல்வாக்குப் பெற்றதும் உடனே பதவிக்காக ஆசைப்படுகிருர்கள். பெரியார் பட்டம் பதவிகளுக்காக ஆசைப்பட்டவர் அல்லர். பதவியில் இருந்துகொண்டே நாட்டுக்குத் தொண்டு செய்யவேண்டும் என்ற நினைப்பில் இவர் பொதுத் தொண்டில் ஈடுபடவில்லை. இன்னும் சொல்லப் போனுல் பதவியை ஏற்றுக்கொண்டு விட்டால் பிறகு தொண்டு செய்வதற்கே நேரமும் நினைப்பும் இருக்காது. இதனுல் பெரியார் பதவியை விரும்பவில்லை. இவர் மட்டும் பதவியை விரும்பி இருந்தால் பதவி இவருடைய காலடியில் வந்து விழுந்திருக்கும. வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் இரண்டு வைஸ்ராய்கள் இவரை மந்திரி சபை அமைக்க வேண்டும் என்று கேட்டார்கள். இவர் மறுத்து விட்டார். இரண்டு கவர்னர்கள் இவருக்குப் பட்டம் பதவிகள் கொடுக்க முன்வந்தார்கள். பெரியார் இவைகளை உதறித்தள்ளி விட்டார். பதவிக்காக ஆசைப் படாமல் இருதய சுத்தத்தோடு மக்களுக்குத் தொண்டு செய் வதில் பெரியாரைப் போல் இன்னெரு பெரியார் தோன்ற முடியுமா? முடியாது.

பெரியாரிடம் ஓர் அற்புத சக்தி இருக்கிறது. இவர் தன்னை விரும்பாதவர்களையும் மயங்க வைக்கும் அற்புத சக்தி படைத்தவர். இதற்குக் காரணம் இவருடைய குழந்தை உள்ளம்தான். இவருடைய நெஞ்சில் வஞ்சகமில்லை. இவருடைய இதயத்தில் இரகசியம் இல்லை. யாரிடமும் பணி வோடும் கனிவோடும் பழகுகிருர். இதனுல் இவர் நீண்ட ஆயுளைப் பெற்றிருக்கிருர்.

இவருடைய நீண்ட ஆயுளுக்கு இன்னெரு காரணமும் இருக்கிறது. பல தலைவர்கள் தமிழ் நாட்டில் தோன் றினுர்கள். தங்கள் கொள்கைகளைச் சொன்னுர்கள். தங்கள் கொள்கைகள் வெற்றி பெருமலே மறைந்து விட்டார்கள்.

தமிழ்நாட்டிலே தோன்றிய எந்தத் தலைவரும் தன் வாழ் நாளிலே தன் கொள்கை வெற்றி பெற்றதைப் பார்க்கவில்லை. பெரியார் எந்தச் சீர்திருத்தக் கொள்கையைப் பிரச்சாரம் செய்தாரோ, எந்தச் சீர்திருத்தக் கொள்கைக்காகப் போராடி னுரோ அந்தக் கொள்கை இவர் காலத்திலேயே நிறை வேறிக் கொண்டு வருவதைப் பார்க்கிருேம். இந்தப் பேறு

வேறு எந்தப் பெருந் தலைவருக்கும் கிடைக்கவில்லை. இது தான் இவருடைய நீண்ட ஆயுளுக்குக் காரணம். தென்னாட்டுச் சரித்திரத்தில் பெரியார் பெற்றிருக்கிற இடத்தை வேறு எவரும் இனி பெற முடியாது. இவருடைய உழைப்புக்குரிய பயனை இவர் வாழ்நாளிலே பெற்றுவிட்ட ஒரு திருப்தி இவரை இன்னும் நீண்ட காலத்துக்கு வாழவைக்கும். வாழ்க பெரியார்!

தமிழ்நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர்

திரு. **ஜெயகாந்தனின்**

நூல்களைத்

தொடர்ந்து வெளியிட்டு வரும்

நிறுவனம்

மீனாட்சி புத்தக நிலையம்

60, மேலக்கோபுரத் தெரு

மதுரை-1.

கட்டுரை.

"கவிஞர்கோ" கோவை. இளஞ்சேரன்.

சொற்பொழிவு, சொற்பெருக்கு ஆகிய தொடர்கள் பிற்காலத்தில் உருவானவை. இதுகொண்டு முற்காலத் தமிழகத்தில் சொற்பொழிவே நிகழவில்லை என்றோ, சொற்பொழிவு என்றொரு துறை இல்லை என்றோ கூறக்கூடாது.

> "தமிழ்நாட்டில் பழைய காலத்தில் சொற்பொழிவாற்றுவது உண்டா? பேச்சு வன்மை உண்டா? என்று பலர் கேட்கிறார்கள். ஏதோ பேச்செல்லாம் கப்பலேறி ஆங்கிலத்தோடு ஆங்கிலமாக வந்ததாக எண்ணம்"

என்று மறைந்த டி. கே. சி. அவர்கள், 'எல்லாம் வெளிநாட்டுச் சரக்கு' என்பாரைக் குறிப்பாக மறுத்து எழுதினார். சொற்பொழிவுத்துறை நம் நாட்டில் இறக்குமதி ஆனது என்பதற்கு மாறாகப் பழந்தமிழகத்தில் இத்துறை இருந்தது. இது நெறியும் முறையும் கொண்டதாக விளங்கியது. செம்மையும் செழிப்பும் கொண்டதாகத் துலங்கியது.

திருக்குறளில் உள்ள சொல்வன்மை, அவையறிதல், அவையஞ்சாமை என்னும் அதிகாரப் பெயர்களே பழந்தமிழகத்துச் சொற்பொழிவுத் துறைக்குப் பதிவான முத்திரைகள். நாலடியார், பழமொழி முதலிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அமைந்த இவ்வதிகாரங்களும் அவை வழங்கும் கருத்துக்களும் தக்க அடையாளச் சின்னங்கள்.

தொல்காப்பியத்தில்,

"வாயுறை வாழ்த்து அவையடக் கியலே
செவியறி வுறூஉவென அவையும் அன்ன"

என்பதொரு நூற்பா. இதில் குறிக்கப்படும் "அவையடக்கியல்" என்பது அவைக்கு அடக்கமாகப் பேசுவதையும் எழுதுவதையும் இலக்கணமாக அறிவிப்பது. சொற்பொழிவுத் துறையில் அவையடக்கம் கூறுதல் ஒரு தனிப்பண்பு. அதனை அறிவிக்கும் இந்த நூற்பாவில் உள்ள "வாயுறை வாழ்த்து", "செவியறிவுறூஉ" எனும் இரண்டும் இங்கு செய்யுளுக்

குரியனவாகக் குறிக்கப்படினும், அவையும் சொற்பொழிவின் ஒரு பகுதியாகவும் அமைபவை. அரசவையில் சான்றோர் எழுந்து நின்று அரசனை வாழ்த்திப் பேசுவதும், அறிவுரை சொல்லிப் பேசுவதும் இப்பெயரிலேயே இலக்கணம் ஆவன. பேசியதை எழுதுவதும், பேசாமலே எழுதியனுப்பப்படுவதும் இங்கே இலக்கணமாகக் குறிக்கப்பட்டுள்ளன. எனவே, இந்த நூற்பா சொற்பொழிவுத் துறைக்குக் குறிப்பான இலக்கணம் தருவது.

முற்காலச் சொற்பொழிவின் இலக்கணம், இலக்கியம் காட்டல் இங்கு நோக்கம் அன்று. சொற்பொழிவைக் குறிக்கும் அக்காலச் சொற்களையும் தொடர்களையும் காண்பதே நோக்கம்.

'சொற்பொழிவைக் குறிக்க முற்காலத்தில் ஒரு தொடர் இல்லையோ' எனலாம். தொடர் இல்லை; பல தொடர்கள் இருந்தன 'ஏன் பல தொடர்களோ' எனலாம். தமிழில் சொற்பொழிவாக விரித்து உரைக்கப்படும் கருத்துக்கள் வகை வகையாக இருந்தன. அவ்வவ் வகைக்கு ஏற்ப ஒவ்வொரு முனையும் ஒவ்வொரு பெயர் பெற்றிருந்தது.

இலக்கிய, இலக்கணக் கருத்துக்களை விரித்து உரைக்கப் படும் சொற்பொழிவு "விரிவுரை" எனப்பட்டது. அறவுரை யாக வழங்கப்படும் சொற்பொழிவு "நல்லுரை" எனப்பட்டது. அறிவுரையாக வழங்கப்படும் சொற்பொழிவு 'செவியறிவுறூஉ' எனப்பட்டது. வாழ்த்துரையாக வழங்கப்படுவது "வாயுரை வாழ்த்து" எனப்பட்டது. சமயத் தொடர்பான உரை "புண்ணிய நல்லுரை" எனப்பட்டது.

சொற்பொழிவைக் குறிக்கும் மற்றொரு பொதுச்சொல் லாகக் "கட்டுரை" என்னும் சொல் இடம்பெற்றது.

இக்காலத்தில் "கட்டுரை உரைக்கப்படுவதைக் குறிப் பதாக இல்லை; எழுதப்படுவதைக் குறிக்கின்றது. ஒரு கருத்தை விளக்கிக் கட்டுக்கோப்புடன் எழுதப்படுவதைக் "கட்டுரை" என்கின்றோம். இக்கருத்துக்கு மூலகாரணமாகத் தொல்காப்பியமும் சிலப்பதிகாரமும் கருத்துக்களைத் தருகின்றன.

"கட்டுரை வகையான் என்னொடு புணர்ந்து" (தொல். பொருள். 428) என்னும் தொல்காப்பிய அடியில் குறிக்கப்படும் கட்டுரை என்பது செய்யுள் அன்றி உரையாகத் தொடுக்கப் படுவது. அஃது எழுத்தாகவும் பேச்சாகவும் அமையலாம்.

சிலப்பதிகாரத்தில் உள்ள "உரைபெறு கட்டுரை" என்னும் தொடர் 'கட்டுரை' என்பது எழுதப்படுவதைக் குறிக்கும் என்பதற்கு ஒரு அமைப்பாக உள்ளது. ஆனால் இத்தொடருக்குக் கொண்ட மாற்றுக் கருத்தால்தான் "கட்டுரை" எழுதப்படுவதைக் குறிப்பதாயிற்று. "உரைபெறு கட்டுரை" என்பது பாடல் அன்றி உரை நடைபெற்றுப் பொருள் பொதிந்ததாய் உரைக்கப்படுவது என்னும் பொருள் கொண்டது. சிலப்பதிகாரத்தில் உள்ள அப்பகுதி எழுத்துருப் பெற்றுள்ளது என்னும் ஒரேவகை எண்ணத்தால் எழுந்த கருத்தின் வளர்ச்சியே காலப்போக்கில் எழுதப்படுவதைக் குறிக்கும் சொல்லாய்க் "கட்டுரை" பயன்படலாயிற்று.

"குழலும் குடுமியென் பாலகன் கூறும்
மழலைவாய்க் கட்டுரை யால்"
—என்பது ஐந்திணை ஐம்பது.

இதனில் கட்டுரை இனிய மழலைப் பேச்சைக் குறித்து நிற்கின்றது.

"தமக்குற்ற கட்டுரையும் தம்மிற் பெரியார்
உரைத்தற் குற்ற உரையும் அஃதன்றிப்
பிறர்க்குற்ற கட்டுரையும் சொல்லற்க; சொல்லின்
வடுக்குற்ற மாகி விடும்."

என்னும் ஆசாரக்கோவைப் பாடலில் வரும் கட்டுரை என்னும் சொல் பேசுவதைக் குறிப்பது. அதனைச் சொல்லற்க என்னும் சொல் சொல்லிக்கொண்டுள்ளது.

"கல்லாத வரிடைக் கட்டுரையின் மிக்கதோர்
பொல்லாத தில்லை ஒருவற்கு"

என்னும் பழமொழிப் பாடல் அறிவுரையாகப் பேசப் படுவதைக் 'கட்டுரை' எனக் குறிக்கின்றது. அதே பழமொழி,

"கல்வி அகலமும் 'கட்டுரை' வாய்பாடும்
கொல்சின வேந்தன் அவைகாட்டும்"

என்று குறிக்கின்றது. அரசன் அவை கட்டுரையைக் காட்டும் என்பதால் கட்டுரை அவையில் பேசப்படுவதைக் குறித்துச் சொற்பொழிவைக் குறிப்பதாகின்றது.

"காயக் கரணமும் கண்ணிய துணர்த்தும்
கட்டுரை வகையும்"

என்னும் மணிமேகலை அடிகளில் கட்டுரை தான் திட்டமிட்டுக் கண்டதை மற்றவருக்கு விளக்கி உணரவைக்கும் பேச்சைக் குறிப்பதாக உள்ளது. இந்நூல் புத்தன் கூறிய பொருள் பொதிந்த உரைப் பேச்சை

"வாமன் வாய்மை ஏமக் கட்டுரை"

என்று குறிக்கின்றது. பழிச்சொல்லைப் பலரிடம் பேசிப் பரப்பு என்னும் பொருளில்

"பான்மைக் கட்டுரை பலர்க்குரை"

எனப்படுகிறது. கந்திற் பாவை சொற்பொழிவைப் போன்று தொடர்ந்து கூறிய செய்திகளைத்

"தெய்வக் கட்டுரை" என்றும்
"கந்திற் பாவை கட்டுரை யெல்லாம்"

என்றும் கட்டுரை என்றும் சொல்லால் மணிமேகலை குறிக்கின்றது.

தம் மதத்தை நிலைநாட்டச் சொற்போரிடும் பட்டி மன்ற நிகழ்ச்சி முற்காலத்திலிருந்தது. அவ்வாறு வினவும் விடையுமாய் மாறி மாறிக் கருத்துப்போரிட்டுச் சொற்பொழிவாற்றுவதும் கட்டுரை என்னும் சொல் கொண்டு மணிமேகலையில் பேசப்பட்டுள்ளது:

"........... முட்டைமுந் திற்றோ;
பனைமுந் திற்றோ எனக் கட்டுரை செய்"

எனும் அடிகளில் அக்கட்டுரையைக் காண்கின்றோம்.

இயற்கை காட்சியையோ, ஒருவர்தம் அழகையோ பாராட்டி வர்ணிக்கும் பேச்சும் கட்டுரை எனப்பட்டது. கலித்தொகையில் ஒரு காதலன் முதலில் தன்னைக் கண்ட காலத்தில் தன் அழகைப் பலபடப் பாராட்டி என் உள்ளத்தை கவர்ந்தான் என்று குறிக்கும் காதலி,

" பலபல கட்டுரை பண்டையிற் பாராட்டி "
(பாலைக்கலி 14)

எனப்பாராட்டிப் பேசுதலைக் கட்டுரை என்ற சொல்லால் குறித்தாள். இவ்வாறு அழகைப் பாராட்டிப் பேசும் பேச்சைக் கட்டுரையாகச் சிலப்பதிகாரமும் பேசுகின்றது.

பள்ளியறையில் கண்ணகியுடன் கோவலன் குலவி மெய் மறந்து அவளது அழகைப் பாராட்டிப் பேசினான். கண்ணகி பேசவில்லை. கண்ணகியை முன்வைத்துப் பேசினான். தொடர்ந்து அவனே பேசினான். கண்ணகி பேசவில்லை. ஒரு சொல்லும் சொல்லவில்லை. எனவே, இஃது உரையாடல் அன்று. கண்ணகியை விளித்து, அவள் உறுப்புகளைப் பலபட வர்ணித்துப் பேசினான். இப்பேச்சு 43 அடிகளில் நீண்டுள்ளது. இப்பேச்சில் உவமை வருகின்றது. கதைக் குறிப்பு உள்ளது. கருத்து விளக்கம் உள்ளது. ஓரளவில் சிறு சொற்பொழிவு எனலாம். இப்பேச்சின் தொடக்கத்தில்,

" கோவலன் கூறுமோர் குறியாக் கட்டுரை "

என்றும் முடிவில்

" உலவாக் கட்டுரை பலபாராட்டி "

என்றும் இப்பேச்சாம் சிறு சொற்பொழிவு, "கட்டுரை" என்றே குறிக்கப்படுகின்றது. "குறியாக் கட்டுரை" என்பதாலும், ' உலவாக் கட்டுரை" என்பதாலும் ஒரு குறியில்லாமல், அஃதாவது திட்டமிடப்படாமல் தொடங்கி முடிக்க இயலாமல் அமைத்த உரையாற்றலாகிய கட்டுரை இது. அஃதாவது முன்னுரையும் முடிவுரையும் இல்லாத பேச்சு.

மாங்காட்டுப் பார்ப்பான் மதுரைக்குச் செல்லும் வழியை விளக்கி நீண்ட உரையாற்றினான். அதனைக் கேட்ட கவுந்தி அடிகள் அவன் கருத்தை மறுத்து ஒரு சிறு உரையாற்றினார். அது,

" கவுந்தி ஐயையோர் கட்டுரை சொல்லும் "

என்று கட்டுரையாகக் குறிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒருவர் கூற்றை மறுத்து நன்மை தீமையை ஆராய்ந்து அதற்கேற்ப மாற்றம் கூறுவதைக் கட்டுரை என்று பழமொழியும்,

"நல்லவும் தீயவும் நாடிப் பிறருரைக்கும்
நல்ல பிறவும் உணர்வாரைக் கட்டுரையின்
வல்லிதின் நாடி வலிப்பதே புல்லத்தைப்
புல்லம் புறம்புல்லு மாறு"

எனக் குறிக்கின்றது.

சிலப்பதிகாரத்தில் 23வது காதை "கட்டுரை காதை' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. அக்காதையில் மதுராபதி என்னும் தெய்வம் கண்ணகியிடம் பேசும் நீண்ட பேச்சு உள்ளது. இக்காதை 200 அடிகளைக் கொண்டது அவற்றுள் 156 அடிகள் மதுராபதியின் தொடர்ந்த பேச்சாக உள்ளது. அப்பேச்சில் சொற்பொழிவின் அமைப்புகளைக் காண்கின்றோம்.

தொடக்கத்தில் அத்தெய்வம் கண்ணகியை அடுக்கு மொழிகளால் விளிக்கின்றது சொல்ல இருக்கும் கருத்தை முன்னுரையாகச் சுருக்கிச் சொல்கின்றது. பாண்டியரது குடிப்பெருமையை—செங்கோல் தவறுமையை விளக்குகின்றது குட்டிக் கதைக் குறிப்புக்கள் வருகின்றன. உவமை வருகின்றது. ஒரு சான்றுக்காகப் பராசரன் என்னும் பார்ப்பனன் கதையை நீட்டிச் சொல்கின்றது கருத்து விளக்கம் தருகின்றது கண்ணகியின் முற்பிறப்புக் கதையைக் கூறுகின்றது. தக்க முடிவுரையுடன் பேச்சை முடிக்கின்றது.

ஒரு சொற்பொழிவு என்பது முன்னுள்ளாரை விளித்தல்—அறிமுகம் செய்துகொள்ளல் எடுத்த கருத்துக்கு முன்னுரை சொல்லல்—சான்று உவமை, குட்டிக் கதைகள், பழமொழிகள், வண்ணிப்பு, அடுக்கி மொழிதல், கருத்தை விளக்கல்—எடுத்த குறிக்கோளை நிறைவேற்றி முடித்தல் என்ற அமைப்பில் இக்காலத்தும் விளங்குவதைக் கொண்டு நோக்கினால் மதுராபதியின் இக்கட்டுரை ஒரு சொற்பொழிவு எனலாம்.

பேசிய மதுராபதித் தெய்வம் தன்னை கண்ணகியிடம் அறிமுகம் செய்துகொள்ளும்போது தன்னைக் "கட்டுரையாட்டியேன்" என்று குறிக்கின்றது இத்தெய்வம் பேசிய

இப்பேச்சைச் சாத்தனார் தாமே கேட்டதாகவும் அதனையும் அவரே சொல்வதாகவும் சிலப்பதிகாரத்தில் பதிகத்தில் வருகின்றது. அதனை கூறும் அவர்,

"கோட்டம் இல் கட்டுரை கேட்டனன்"

என்று குறிக்கின்றார்.

ஒரு நல்ல சொற்பொழிவுப் பாங்கில் அமைந்த இந்தப் பகுதி "கட்டுரைகாதை" என்றும், பேசிய தெய்வம் "கட்டுரை யாட்டி" என்றும் அப்பேச்சு மற்றுமோர் இடத்தில் "கட்டுரை" என்றும் ஒரே சொல்லாய்க் குறிக்கப்படுவதை நோக்கினால் ஒருவர் முன்னிலையையே அவைக் களமாகக் கொண்டு ஆற்றப்பட்ட சொற்பொழிவு இது எனலாம்.

மேலும் சிலப்பதிகாரத்தில் ஒவ்வொரு காண்டத்தின் இறுதியிலும், நூலின் இறுதியிலும் தொகுத்து உரைக்கப் படும் பகுதிகள் "கட்டுரை" என்னும் தலைப்பில் உள. பொருள் பொதிந்த உரை என்னும் கருத்தில் இத்தொகுப் புரைகள் அவ்வாறு குறிக்கப்பட்டன போலும். இப்பகுதிகள் பிற்காலத்தில் எவராலோ எழுதப்பட்டுச் சேர்க்கப்பட்டன வாகப்படுகின்றது.

தொல்காப்பியத்தில் சுட்டி எழுதப்படும்—உரைக்கப்படும் செய்தி கட்டுரை என்ற சொல்லால் எழுந்து, செல்லச் செல்லக் கட்டுரை என்னும் சொல் கட்டுக்கோப்போடு உரை யாற்றுவதையும், அதன் தொடர்பில் சொற்பொழிவையும் குறிப்பதாக வளர்ந்து, இக்காலத்தில் எழுதப்படுவதையே குறிப்பதாக நிலைத்துள்ளது.

ஈரோட்டுப் பூகம்பம்.

இரெ. மகாலிங்கம், B.A.,
விளம்பர உதவியாளர் மக்கள் தொடர்பு அலுவலகம், தஞ்சை.

"Rationalism in India still depends heavily on personalities. But individuals can achieve more in such than we in Britain can imagine".

"இந்திய நாட்டில் பகுத்தறிவு என்னும் தத்துவம் இன்னும் தனி நபர்களைத்தான் சார்ந்து நிற்கிறது: ஆனல் பிரிட்டனில் வாழ்கிற நாம் கற்பனை செய்து பார்ப்பதற்கு அதிகமாகவே அந்தத் துறையில் அந்தத் தனி மனிதர்கள் செயலாற்றி வெற்றியும் பெற்றிருக்கின்றனர்."

"It is largely due to his activities that one can find today in Tamil Nadu a more egalitarian and non-religious attitude than anywhere else in India,"

"இந்தியாவின் மற்ற எந்தப் பகுதியிலும் காண இயலாத அளவிற்கு சமத்துவ மனப் போக்கும், சமயச் சார்பற்ற தன்மையும் தமிழகத்தில் நிறைந்து காணப்படுவதற்கு அவரது நிறைவான சமுதாயப் பணிதான்."

இவை, வீழ்ந்துகிடந்த ஒரு இனத்தை விழித்தெழச் செய்த விடிவெள்ளி விளைவுகளைப் பற்றி கவலை கொள்ளாமல் ஆரியத்திற்கு எதிராகப் போர் தொடுத்து அரியதொரு வெற்றி கண்ட மாவீரர்; தாறுமாறுன நெறிகளையும் தடுமாற்றமான வாழ்க்கை முறைகளையும் பற்றி காலச்சக்கரத்தைப் பின்னேக்கி சுழற்ற முயன்ற ஒரு இனத்திற்கு வளர்ச்சிக்கான பாதையினைக் காட்டி வாழ்விக்க வந்த ஏந்தல், நாட்டில், பரவிக் கிடக்கும் துறைகள் தோறும் படர்ந்து கிடந்த அறியாமை என்னும் இருள் அகற்றி பகுத்தறிவு என்னும் ஒளிக்கதிர் பாய்ச்சிட்டக் கதிரவன், ஜாதி, பாகுபாடுகளும் மற்றைய சமுதாய சீர்கேடுகளும், அகன்று அநீதியற்றதும், ஆதிக்க மற்றதும், ஆன ஒரு சமுதாய அமைப்பினை உருவாக்கிட வேண்டி தள்ளாத வயதிலும் பொல்லாத உலகை எதிர்த்து போர் தொடுத்திடும் புரட்சித் தலைவர், போர் மறவர்

"அரசியல் விமர்சனங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட பெரும் சமுதாயத் தலைவர்" தந்தை பெரியார் அவர்களின் பெரும் பணியினையும், கடும் உழைப்பினையும் கண்ணுற்ற எண்ணற்ற எழுத்தாளர்கள் வரைந்த ஏடுகளில் காணக் கிடக்கின்ற கருத்துரைகளாகும்; தன்னலம் கருதா பணி மூலம் தமிழ் நிலத்தில் புரட்சிப் புதுயுகத்தின் தலைவாயிலை திறந்துவிட்ட தந்தைக்கு வையகம் மனமுவந்து வழங்கியப் பாராட்டுரைகளாகும்.

"நாகரீக மனித இனத்தின் கடைசித் தலைமுறை" என்ற பெருமைக்குரிய இன்றைய உலகு கடந்துவிட்ட நாட்களில் கணக்கற்ற சமுதாயப்புரட்சியாளர்களையும், சிந்தனைக்கிளர்ச்சியாளர்களையும் சந்திக்கின்ற வாய்ப்பு பெற்றிருக்கிறது. இந்திய நாட்டில் கூட சீர்திருத்தவாதிகள் என்ற பெயரில் சிலர் வாழ்ந்திருக்கின்றனர் பகுத்தறிவு கொள்கையினை வலியுறுத்தி சில ஏடுகள் வரைந்திருக்கின்றன. அத்தோடு பணி முடிந்துவிட்டதென அவர்கள் அமர்ந்துவிட்டனர். ஆனால், தந்தை பெரியார் அவர்கள் மட்டும்தான் சமுதாய மாற்றத்திற்கான கொள்கையினைத் தந்து. அவை வடிவம் பெறுவதற்கான வழிகளையும் சொல்லி, அவை நாட்டில் நிலை பெறுவதற்காக தன்மானப் பெரும்படை என்னும் பேரியக்கம் கண்டு பெரும்பணி ஆற்றிவருகிறார்கள்.

பெரியாருக்கு முன், சமுதாய அரங்கில் மாற்றம் வேண்டுமென விரும்பியவர்கள் வினவிய சீர்திருத்தம் (Reform) என்பதும் தந்தை பெரியார் அவர்கள் "கிரியா ஊக்கி" (Catalyst) ஆக இருந்து தமிழ் சமுதாயத்தில் செய்து வருகின்ற அடிப்படையான மாற்றம் (Reconstruction) என்பதும் மேலெழுந்தவாரியாக பார்க்கையில் ஒன்றுபோலத் தோன்றும் ஆனால், அவற்றிற்கு அகராதிபகரும் பொருள்களை ஆழ்ந்து நோக்கினல் அவற்றிற்கிடையுள்ள வேறுபாடு தெள்ளத் தெளிவாகத் தெரியும். Reform என்ற சொல்லுக்கு To remove defects from என்று அகராதி பொருள் தருகிறது. அதாவது, சீர்திருத்தம் என்பது பழுதடைந்த பழைய தளத்தை மாற்றுமல் மேல் பகுதியில் மட்டும் பூச்சு வேலை பார்ப்பதாகும். பழங்காலத்தில் புலவர்களும், முனிவர்களும், மற்றவர்களும் சொன்ன சீர்திருத்தம் செய்த மாற்றம்

இதுதான். ஆனல், Reconstruction என்பதற்கு The act of reconstructing re-organisation or a theoritical representation or view of something unknown.

என்று பொருள் காணப்படுகிறது. இதுவரை உலகம் கண்டறியாத புதியதொரு தத்துவார்த்த முறையினை பிரதி பலித்து அதன் அடிப்படையில் பாசிபடிந்த பழைய சமுதாய அமைப்பினை அடித்தளத்தோடு உடைத்தெறிந்துவிட்டு உன்னதமானதும், மனிதாபிமானத்தை பேணுவதுமான தொரு அமைப்பினை நிர்மாணிக்கும் பணியாகும். 'உயர் எண்ணங்கள் மலரும் சோலை'' என்று பாவேந்தர் போற்றிப் புகழ்ந்த புரட்சியின் வேந்தர் தந்தை பெரியார் இந்த இரண் டாவது வகை. சிந்தனை கழகத்தின் தந்தையாவார்கள்.

இப்படி சமுதாயத்தில் அடிப்படையான தலைகீழ் மாற்றம் தேவையென அய்யா வலியுறுத்துகின்ற காரணத்தினல், அவரை அழிவு வேலைக்காரர் என்றும் இருப்பதைக் கெடுப்பவர் என்றும், எதையும் அழிப்பவர் என்றும். நாத்திகர் என்றும், நா தடுப்பேறிய சிலர்—தமிழினம் ஏமாந்த வேளை யில் ஏற்றம் பெற்ற எத்தர்கள்—பேசியும் எழுதியும் வருகிறார் கள். அதற்கு தந்தை பெரியார் அவர்கள் ''நான் இருக்கின்ற எதையும் அழிக்கவேண்டுமென்று சொல்லவில்லை; இல்லாத ஒன்றை இருப்பதாக இந்த நாட்டு மக்கள் தவருக நம்பிக் கொண்டிருக்கின்ற தன்மைதான் ஒழியவேண்டுமென்று சொல்கிறேன்'' என்று தெளிவாக பதிலளித்தார்கள். வசை பாடிய புல்லர் கூட்டம் வாயடைத்துப் போயிற்று.

கடவுள் நம்பிக்கை முதலான காட்டுமிராண்டி கால எண்ணங்களைவிட்டு, பகுத்தறிவு புரிநோக்கி பயணம் நடந் திடும் தமிழினத்தின் பழைய நிலையை இன்று அடைந் திருக்கும் புதிய வளர்ச்சித் தன்மையோடு ஒப்பிட்டு பார்க்கும் போதுதான் பெரியாரின் பெருமை தெரிகிறது. அவர் ஆற்றிய பணியின் வலிமை புரிகிறது.

ஜாதியின் பெயரால் ஏற்றத் தாழ்வுகளும் மதத்தின் பெயரால் கொடுமைகளும், கடவுளின் பெயரால் அக்கிரமங் களும், வேதத்தின் பெயரால் மோசடிகளும் நிகழ்ந்த கொடிய நேரத்தில் பெரியார் பகுத்தறிவின் துணையோடு கடும் பயணம் துவக்கினர். சமுதாய நோயுக்குச் சரியான காரணம் என்ன

என்பதை கண்டு உலகிற்கு சொன்னர். தாழ்ந்த தமிழினம் தலைநிமிர கொள்கை வகுத்து அதை நடைமுறைப் படுத்த திட்டமும் தந்தார்.

சமுதாயத்தில் பெரும்பான்மையினராக இருந்த ஒரு பெரிய இனம் தனக்கென்று ஒரு பெயரிட்டு அழைத்துக் கொள்ள வக்கின்றி உலகிற்கு அறிமுகப்படுத்திக்கொள்ள வழியின்றி நாட்டில் வெறும் மூன்று சதவிகிதத்தினராய் மட்டுமே இருந்த பார்ப்பனரை முன்னிறுத்தி பார்ப்பனரல்லாதவர்கள் (Non-brahmins) என்று அழைத்துக் கொண்ட பரிதாபகரமான நிலையினை மாற்றியமைத்தப் பெருமை தந்தை பெரியாரின் தனிவுடைமையாகும்.

பல்வேறு காரணங்களால் பலவாருக சிதறுண்டு கிடந்த தமிழ் சமுதாயத்தை ஒன்று கூட்டி ஒருங்கிணைத்து புரட்சிகரமான காலங்களில் புத்துயிர் பெறுகின்ற அவர்களின் படைப் பாற்றலை வெளிப்படச் செய்து "புரட்சியை இழுத்துச் செல்லும் இயந்திரம்" என்று வர்ணிக்கப்படும். பெரும் சமுதாயப் புரட்சியை தமிழகத்தில் வெடிக்கச் செய்த பெருமை தமிழினக் காவலர் அய்யா அவர்களைத்தான் சாரும்.

தமிழன் தன்மானத்தோடு வாழவேண்டுமானல்—தமிழர்கள் சூத்திர தன்மையைவிட்டு மனிதத் தன்மையோடு வாழ வேண்டுமானல், நாலாந்திர ஜாதியாக இல்லாமல், பிற நாட்டினருக்கு இணையாக அறிவுத்துறையில், ஆராய்ச்சித் துறையில் வளர்ச்சிப்பெற வேண்டுமானல் கடவுள் – மத – ஜாதி–வேத – இதிகாச – புராண – சாஸ்திர சம்பிரதாய முறை ஒழியவேண்டும் என்கிருர். கடவுள் இல்லை–கடவுள் இல்லை–கடவுள் இல்லவே இல்லை – கடவுளைக் கற்பித்தவன் முட்டாள் —கடவுளைப் பரப்பினவன் அயோக்கியன்—கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி என்று உரக்கக் குரல் கொடுத்தார். அவர் வெங்கலக் குரல் கேட்டு இந்த குவலயம் விழித்தெழுந்தது.

தந்தை பெரியார் அவர்களின் தன்னலமற்ற உழைப்பின் காரணமான கடந்த ஐம்பது ஆண்டு காலமாக காடுமேடு என்று சுற்றி தொல்லைகளையும், துயரங்களையும் துச்சமென மதித்து நடத்திய பிரச்சார இயக்கத்தின் விளைவாக தமிழ்

மக்களிடையே புதியதொரு தெளிவான சமுதாயக் கண்ணோட்டம் வளர்ந்திருக்கிறது. புதிய எழுச்சியும் புத்துணர்ச்சியும் மலர்ந்திருக்கிறது. அதற்கு அறிகுறியாக 1967-ல் பகுத்தறிவுப் பாசறையின் தளபதி, தன்மான தந்தை யின் மூத்த தனயன் பேரறிஞர் பெருந்தகை அண்ணு ஆட்சி பொறுப்பேற்ருர். "யான் பெற்ற அரசு எம் தந்தைக்குரிய பரிசு" என்று கூறி தனது அமைச்சரவையை அய்யாவின் காலடிக்கு காணிக்கையாக்கினுர். தந்தை பெரியார் அவர் களின் அடியொற்றி கொள்கை வழிபற்றி சமுதாய மாற்றத் திற்கான திட்டங்கள் தீட்டினுர், சட்டங்கள் இயற்றினுர், காரியங்கள் ஆற்றினுர்.

அறிஞர் பெருந்தகை அண்ணு அவர்களுக்குப் பின் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ருர்கள். "பாராட்டி புகழும் பழமை லோகமெல்லாம் ஈரோட்டு பூகம்பத்தால் இடியுதுபார்" என்ற எழுச்சி வரிகளை தனது இளமை வயதிலேயே இசைத்த இலட்சியவாதிதான் டாக்டர் கலைஞர் அவர்கள். எனவேதான், The D. M. K, Rule in Tamil Nadu is an example of Sudra's supermacy in the political field———————————-என்று ஏடுகள் வர்ணிக் கின்ற அளவிற்கு தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப் பட்ட மக்களின்—சாக்கடை ஓரங்களில் நெளிகின்ற புழுக் களைப் போல சமுதாயத்தில் உலவுகின்ற மனிதர்களின் பிரதிநிதியாக இருந்து அய்யாவின் கனவுகளை நனவாக்கிடும் வகையில் ஆட்சிபுரிந்து வருகிருர். "சமுதாய மாற்றமற்ற பொருளாதார மாற்றம் புண்ணை மறைத்து பொன் துகில் அணிந்துகொள்கிற கதையாக முடிந்துவிடும்." என்ற தத்துவத்தினை கருத்தில் கொண்டு சமுதாய மாற்றத்திற்கான காரியங்களை ஆற்றி வருகிருர்.

1. சுயமரியாதை திருமணங்களுக்கு சட்ட வடிவம்.
2. கலப்புமணத் தம்பதிகளுக்கு தங்கப் பதக்கம்.
3. அரசு அலுவலகங்களில் கடவுள் படங்களை ஓசைப் படாமல் அகற்றிட ஆணை.
4. அர்ச்சகர் நியமனத்தில் அனைத்து சாதியினருக்கும் வாய்ப்பளிக்க சட்டம்.

5 ஆலயங்களின் உபரி வருமானத்தை ஆத்திகர்களின் எதிர்ப்பிற் கிடையே முன்னேற்றப் பணிகளுக்கு செலவிடத் திட்டம்.

6. கல்வி உத்தியோகத்துறையில் தாழ்த்தப்பட்ட பின் தங்கிய மக்களுக்கு அதிக சலுகை.

போன்றவை அறிவுலக சிற்பி தந்தை பெரியாரின் காலடிக்கு அறிஞர் பெருந்தகை அண்ணா காணிக்கையாக சமர்ப்பித்த பகுத்தறிவு அமைச்சரவை சமுதாயத்துறையில் சாதித்த சாதனைகள் சில. இப்படி தனது பெரும் பணியின் விளைவான பெரும் சமுதாய மாற்றத்தை தன் வாழ்நாளிலேயே கண்டு மகிழ்கின்ற வாய்ப்பினைப் பெற்ற "புத்தரின் பதிப்பு ....பெருமையின் சிகரம், குமுதமேனி கொள்கை செங்கோல், கோடி பிறைகள் மேலும் காண்க!' என்று வாழ்த்திடும் கொஞ்சும் தமிழ் நெஞ்சத்துடன் என்னையும் இணைத்து மகிழ்கின்றேன்.

"ஓர் ஆணுக்கு ஒரு சமையல்காரி; ஓர் ஆணின் வீட்டிற்கு ஒரு காவல்காரி; ஓர் ஆணின் குடும்பப் பெருக்கிற்கு ஒரு பிள்ளை விளைவிக்கும் பண்ணை என்பது அல்லாமல் பெண்கள் பெரிதும் எதற்குப் பயன்படுகிறார்கள்? பயன்படுத்தப்படுகிறார்கள்? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்."

—தந்தை பெரியார்.

அரசியலும் கலையும்:

நாங்கள் அரசியல் என்ற பாலைவனத்திலே நடக்கின்ற நேரத்திலே—இடையிலே ஏதோ நீரூற்றுகள் போலக்கூட இல்லை; கொஞ்சம் இளைப்பாற அங்கே நிற்கும் ஒட்டகத்தின் நிழலிலே உட்காருவதைப் போலத்தான் கலையுலகத்தைக் கருதுகிறோமே தவிர, அங்கேயே ஐக்கியமாகிவிடவில்லை! அங்கிருந்து சிலரை இழுத்துக்கொண்டுதான் வந்திருக்கிறோம்.

—தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்.

" அவரைக் கொஞ்சம் ஆராயலாம் "

புலவர் அ. அறிவொளி எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர்,
பூம்புகார்ப் பேரவைக் கல்லூரி.

தந்தை பெரியார் அவர்களுக்குப் பிடிக்காத முறையில் அவரை வருணிக்க வேண்டியிருக்கிறது. ஆம்! அவர் ஓர் அதிர்ஷ்டக்காரர்! என்ன செய்வது வரலாறு அல்லவா அப்படி வருணிக்கத் தூண்டுகிறது?

பிளேட்டோ—இந்தக் கிரேக்க நாட்டு அறிஞன் சாக்ரடீஸ் சொல்லிய கருத்துக்களை ஒழுங்காகத் தொகுத்தான். அவன் காலத்தில் தான் தொகுத்த கருத்துக்களை நடைமுறைப்படுத்த முயன்ருன். ஆனால் தோற்றுப்போனுன். அவனுடைய மாணுக்கன் அரிஸ்டாடில் எழுதியவை ஏராளம்! நடைமுறைப்படுத்த அலெக்ஸாந்தரையே உருவாக்கினுன். கண்டபலன்? அவன்காலத்தைப் பொறுத்தவரை தோல்வி தானே! இந்தப்பூவுலகம் காணுத புரட்சிப்பூக்களை ஏட்டில் தீட்டிவைத்தான் ரூசோ! ஆனால் அவன் காலத்தில் அந்தப் பூக்கள் மணக்கவில்லையே! பிரஞ்சுப் புரட்சியின் ஆதாரப் புத்தகமே அவனுடைய சமுதாய ஒப்பந்தம் என்ற அரிய நூல்தான். அந்த, 'உலகத்தின் சமுதாய வேத புத்தகம்' அவன் காலத்தில் புரட்சியை உண்டாக்க வில்லை! அவன் இறந்த பிறகு பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் பிரஞ்சுப் புரட்சி வந்தது.

இப்படி எவ்வளவோ அறிஞர்கள், சீர்திருத்தவாதிகள் தங்கள் கருத்துக்கள் தங்களின் கண்ணுக்கு முன்னலேயே, காலத்தின் கவின்மிகுந்த பயிராக வளர்வதைப் பார்க்க முடியாமல் போனுர்கள். ஆனால் தந்தைப் பெரியார் தன் காலத்திலேயே தன் கருத்துக்கள் விளைந்து, மலர்ந்து, மணம் வீசுவதைக் கண்டு கொண்டிருக்கிருர். ஆகவே அவர் ஓர் அதிர்ஷ்டக்காரர் தானே!

எத்துணையோ சீர்திருத்த வாதிகள் அவர்களின் கருத்தை அழிக்க இவ்வுலகம் அவர்களையே " அவதார

வீரர் " களாக ஆக்கிவிட்டது. ஆம்; புத்தரும் மகாவீரரும் அப்படித்தானே ஆகிவிட்டார்கள் முகமது நபி, தன் கல்லறையை வணங்கக்கூடாது என்றார். தன்னைக் கடவுளாக்கி விடுவார்களோ என்று அஞ்சித் தன் ஓவியத்தையே எழுதாமல் விட்டுப் போனார். ஆனால் நடந்ததென்ன? அவர் சமாதியை மட்டுமன்றிப் பிறர் சமாதியையும் வணங்குகின்றனர்.

ஆனால் பெரியாரை யாரும் ஏமாற்ற முடியாது. 'அவதார வீரர் என்ற வேடம்போட்டு விடாதபடித் தன் பாதையை மிகத் தீவிரமாக அமைத்துக்கொண்டு விட்டார் இவர். இது அவர் வரலாற்றில் ஆழப்பதிய வைத்த அரிச்சுவடியாகும்.

கமால்பாட்சா! துருக்கிய நாட்டின் துருவ நட்சத்திரம்! அவன்கூட அதிகாரத்தைப் பயன்படுத்தித்தான் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்தினான். ஐரோப்பிய தொப்பியை அணியாமல் துருக்கிய தொப்பியை அணிந்ததன் நாட்டுமக்களையே சுட்டுப் பொசுக்கினானவன்.

ரஷிய நாட்டை ஐரோப்பிய பாணியில் அமைக்கக் கருதிய மாபெரும் பீட்டர், தன் கையில் செங்கோலை மட்டுமன்றிக் கத்தரிக்கோலையும் பிடித்து ரஷியரின் நீண்ட தாடிகளை நறுக்கினான். நீண்ட அங்கி அணிந்தவர்களுக்கு நீட்டத்தின் அளவுக்கு வரிவிதித்தான்.

இப்படிச் சில சீர்திருத்தவாதிகள் தங்கள் அரசியல் அதிகாரத்தினால் தான் செம்மைகளைச் செய்தார்கள். ஆனால் பெரியார், கருத்துக்களைப் பரப்புவது, போராட்டங்களை நடத்துவது, தீவிரவாதிகளை ஊக்குவிப்பது, முதலிய குடியரசுக்கு உட்பட்ட செயல்களை மட்டும் செய்து அரசியல் பதவியின்றியே செம்மைகளைச் செய்தார். அரசியலில் எதிர் நீச்சல் போட்டுத்தான் அவர் மிகுதியான சாதனைகளைச் செய்தார்.

நீதி மன்றங்கள் அவருக்கு விவாத மேடைகள்! குற்றவாளிக் கூண்டுகள். அவருக்குக் 'குளு குளு' அறைகள்! சிறைச்சாலைகள் அவருக்கு மருத்துவ மனைகள்!

நீதி மன்றங்களின் நடவடிக்கைகளுக்கு எதிரான கருத்துக்களை வெளியிடுவோரை வெளியே விட்டுவைப்பது வழக்கமில்லை. ஆனால் அவர் எவ்வளவோ நீதிமன்றங்களுக்கு எதிரான கருத்தை வெளியிட்டார், எழுதினார், பேசினார். நீதிமன்றங்கள் தங்களுக்கு எதிராகப்பேசும் அவருடைய வாதத்தில் தெளிந்த நீதியைக்கண்டு நெஞ்சு புழுங்கின! அஞ்சின! அந்தப் புயலைத் தென்றல்போல் சுவாசித்தன! அவர் காட்டிய காரணங்கள் அப்படியல்லவா இருந்துவிட்டன!

தாழ்த்தப்பட்டோர், சாதியால் பிற்படுத்தப்பட்டோர், ஆகியோரின் முடிசூடா மன்னரவர்! தெய்வங்களுக்கும் தத்துவங்களுக்கும் எதிரான கொள்கைகளுக்கு அவரே தெய்வம்! மொழியடிமை கொண்டு மூட்டிய முரடர்களுக்குப் பதிலடி கொடுத்த பயில்வான்! என்ன செய்வது அவருக்குப் பின்னால் இருக்கும் பட்டாளத்தைக் கண்டு பயப்படாமல் இருக்க முடியாதே?

அவர் ஒரு சமுதாயச் சீர்திருத்தக்காரர்தான்; ஆனால் அரசியலின் ஒவ்வொரு நாடி நரம்பும் அறுபது ஆண்டுகளாக அவரில்லாமல் இயங்க முடியவில்லையே என்னதான் செய்ய முடியும்? ஏனைய இந்திய மாநிலங்களைவிடச் சிறந்த சாதனை அரசுகள் தமிழகத்தில் வாழவும் வளரவும் அவர்தான் காரணம் என்பதை வரலாறு வேறு வழியின்றி ஒத்துக் கொள்ளுகிறது.

ஜீரணிக்க முடியாதபடிச் செரிமானச் சக்தியை இழந்து விட்ட சில குடல்களுக்கு அவருடைய கருத்துக்கள் அடிக்கடி வயிற்றுப்போக்கைத் தருவது உண்மை! ஆனால் அது தவிர்க்க முடியாதது!

மொழி, அரசியல், சமயம், சமுதாயம், நாகரிகம், பழக்க வழக்கம் இப்படிப் பலதுறைகளில் அவர் ஒரு திருப்பு முனை! சமுதாய வரலாற்றை உள்ளபடி ஆராயும் யாருக்கும் அவர் ஒரு புதிய காலத்தின் உதயசூரியன் என்பது விளங்கும்.

சிலவற்றை அவர் திரும்பத்திரும்பக் கூறுகிறார். தேவையில்லை என்றுகூடச் சிலருக்குத் தெரிகிறது. அவருக்கும் அது தெரிகிறது. ஆனால் சில நோய்கள் தீர்ந்துபோனது

போல் தோன்றி மீண்டும் புரையோடிவிடக்கூடும் என்பது அந்தச்சமுதாய டாக்டருக்குத் தெரிந்திருக்கிறது. அவருடைய நம்பிக்கை அனுபவமயமானதை அதனை ஆராயமுடியாது.

அவர் ஒரு சமுதாயக் காற்ருடி! அதனுல்தான் இயல்பான காற்றை எதிர்த்தே எப்போதும் சுழல்கிருர். அவர் கூறும் சிலகருத்துக்கள் கவிஞனுடைய மிகையான கற்பனைபோல் இருப்பதுண்டு. ஆனுல் அதை இப்படிப்பார்க்கலாம். அதாவது சில நோய்களுக்கு அதிர்ச்சி வைத்தியமே அருமையான மருந்தாக அமைவதுண்டு. அதுவே அவர் நம்பிக்கை.

அரசியலை வெறுப்பார். பிறகு அவரே ஆதரிப்பார். இதை ஆராய்வது சற்றுக் கடினம். வயதான குடலுக்கு ஒத்துக் கொள்ளாது என்று கூறினுலும் வான்கோழி பிரியாணியை அவர் விட்டு விடுவாரா? அதுபோலத்தான் இது என்ன இருந்தாலும் சமுதாயத்தின் பயன் கருதித்தான் அவர் அரசியல் சார்பு இருந்தது என்பதை ஒத்துக்கொண்டே தீரவேண்டிய இரகசியமாக எண்ணுவோம்.

ஆயிரக்கணக்கானவர்களுக்கு இடையில் அவர்களின் முட்டாள் தனத்தை வெளிப்படையாக அவர் கூறுவார். காட்டுமிராண்டியே என்று கண்டிப்பார். படுக்கையறைச் செய்திகள் புராணச் செய்திகளாக இருப்பதைப்பட்டவர்த்தன மாக்கி விடுவார். இது அவரால் மட்டும் செய்யமுடிந்த அதிதீர வீரம்! ஒரு கட்சியின் மேடையில் ஏறி அத்தொகுதி யில் அக்கட்சி வேட்பாளரை ஆதரிக்காமல் அக்கட்சிக்கு எதிரான ஒருவரையே மிகுதியும் ஆதரித்துப் பேசிவிட்டார். குழப்பமில்லை, கோபமில்லை. ஒன்றும் குடிமுழுகிப்போய் விடவில்லை. ஒருமுறை கர்மவீரர் காமராசர் அவர்களையே எதிர்த்தார், கேவலமாகப்பேசினுர். பிறகு அவரையே 'பச்சைத் தமிழன்' என்ருர். அவர் சாதித்ததை இவர் அம்பலப்படுத்தினுர். தூணுக நின்ருர், துணையானுர். கேவலம் காசுக்கல்ல! சுயநலத்துக்கல்ல! சமுதாயத்தின் சந்துபொந்துகளிலே இவரின் ஆழ்ந்த பார்வை பதிந்தது தான் காரணம்.

தமிழ்மொழிபற்றிய அவருடைய கசப்பான வருணனை! பெண்களின் கற்புப் பற்றிய அவருடைய அதிர்வேட்டுக் கருத்து! வீட்டில் சமையல் செய்யாதே என்ற வெடிமருந்து! ஐயரில்லாத திருமணமா அதுகூடவா தேவை? என்ற புளிப்பான மாத்திரை! இவை யாவும் பலருக்குப் புரியாத புதிய விடுகதைகள். இவைகள் அவரிடம் உள்ள முரணிய கருத்துக்கள் என்பது ஒருபுறத்து வருணனை. ஆனால் அவரோ மறுக்கமாட்டார். ஆனால் உண்மையில் அவை முரண்பாடுகளா? இல்லை. கார்ல் மார்க்ஸினுடைய சிந்தனை, லெனின் செயல்திறம், ஸ்டாலினின் துணிச்சல் ஆகிய மூன்றும் தந்தைப் பெரியாராக வடிவம் கொண்டுவிட்டன. ஆனால் இவற்றைச் செயலாக்கும் அரசியல் அதிகாரம் மட்டும் இல்லாத ஏழையாக வெறும் நினைவுகளைச் சுமந்து வாழும் கூலிக்காரனாக இருந்துவிட்டார் அதுதான் குறை! அதாவது அவர் இந்நாட்டின் சர்வாதிகாரியாக ஆகியிருந்தால் அவருடைய முரண்பாடுகள் வெறும் 'வெங்காயங்களாக' மாறிப் போய் உலகத்திற்குத் தேவையான வழிகாட்டியாக ஆகியிருப்பார்.

சாதிப் பூசலையும் ஏற்றத் தாழ்வையும் வளர்க்கிறது மதம்! ஆகவே மதம் அழிய வேண்டும்—மதம் அழியக் கடவுள் நம்பிக்கை அழியவேண்டும்—அந்த நம்பிக்கையை உண்டாக்குவது இலக்கியம்—ஆகவே அது அழியவேண்டும், எனவே தமிழ்மொழி காட்டுமிராண்டி மொழி! என்பது ஆவேசமான ஓர் அதிர்ச்சி வைத்தியம். பழமை எதுவுமே எங்கே இருந்தாலுமே அவருக்கு அது காட்டுமிராண்டித் தனம் என்பதில் ஐயமில்லை.

எவ்வளவோ இரும்புத்திரை இட்டும் ஐரோப்பியப் புது நாகரிகம் ரஷியாவின் உள்ளே புகுந்து குடும்ப வாழ்வைக் குலைத்துவிட்டது என்கின்றனர். எனவே இந்தியாவிலும் அந்நாகரிகம் வரலாம் என்ற பயம்! எதிர்காலச் சிந்தனை அவருக்குண்டு! பழமையில் ஊறிப்போன ஒரு நாட்டில் முற்றிலும் வேறுபட்ட புதுமை திடீரென வந்தால் குழப்பமே வரும் என்ற தூரப்பார்வை மேலும் பெண்களை அடிமையாக்க ஆண்கள் கைக்கொள்வது இக்கற்பு. ஆகவே அவர் கற்பைப்

பற்றி அவ்வாறு பேசினர். பாரதியார் கற்பென்றல் ஆணுக்கும் வேண்டும் பெண்ணுக்கு மட்டுமாயின் கூடாது என்று பேசினர்.

"கற்பென்று பேசிடிலோ இரு கட்சிக்கும் அதனைப் பொதுவில் வைப்போம்"—என்பது பாரதியின் வாசகம். அப்படிக் கூறிய பாரதியின் மேல் ஏன் நமக்கு வெறுப்பு வரவில்லை பெரியாரிடம் மட்டும் ஏன் வருகிறது? அவர் மீது வெறுப்பு வேறு காரணமும் இருப்பதால் வருகிறது என்பதுதானே!

குடும்பம், சொந்தம், பந்தம், சடங்கு, சம்பிரதாயம், இவைகள் சாதியைக் காப்பாற்றுகின்றன. நாட்டின் பொருளாதாரத்தை மிகவும் அதிகமாகப் பாதிக்கின்றன. மக்கள் தொகை மிக்குள்ள நாட்டில் உறவுமுறை ஒரு பிரச்சினை! உறவு முறை தேசிய ஒருமைப்பாட்டுக்குக்கூட எதிரிதான். ஆகவே இவைகள் இல்லாத பறவை போல் வாழ்க்கை ரஷியாவில் இருக்கிறது. அதுபோல் இங்கும் வரவேண்டும் என்ற சிந்தனையே 'வீட்டில் சமைக்காதே' என்ற வெடிமருந்து. ரஷியாவைப்போல் இதனை அமைத்துக் காட்டிவிட்டால் இது வெடிக்காத வெறும் மருந்தாகப் போய்விடும்.

ஆகவே அவர் சூத்திரமாகச் சொல்வதை நாம் முரண்பாடு என்கிறோம். ஐந்தாவது படிக்கும் மாணவனுக்குப் பதினோராம் வகுப்பு அல்ஜிப்ரா புரியும் என்று கூற முடியுமா? எனவே அவன் இன்னும் பல வகுப்புக்கள் கடந்துவிட்டால் அவனுக்கே அது புரியும்! அவர் முரண்படவில்லை, முன்னடியே போய் நின்று விடுகிறர் அவ்வளவுதான்!

சிலவற்றைச் செய்யவேண்டியிருக்கிறது; ஆனல் செய்யவோ அதிகாரம் இல்லை! சொல்லாமல் மறைக்கவோ முடியவில்லை! எனவே எவர்க்கும் அஞ்சாமல் அவர் பேசுகிறர்.

வெளிப்பார்வைக்கு அவர் கடியவர் சிலருக்குக் கொடியவர்! ஆனல் அனைவருக்கும் அவர் தனிமையில் இனியவர்; நண்பர். தன்னைவிட இளையவர்களையும் "வாங்க

ஐயா" என்றே எப்போதும் யாரிடமும் அழைத்துப் பழகும் அவர் நாகரிகம் அவருடன் பிறந்தது. அவர் எதிர்க்கும் ஜாதியினர் அவரைத் தனிப்படக் கண்டபோதெல்லாம் அவர் பழகிய பண்பாடு அவர்களையே வியக்க வைத்தது.

'தன் கீழ் உள்ளவர்களை அவர் வளர விடுவதில்லை. அதற்குக் காரணம் தன்னைவிட அவர்கள் வளர்ந்துவிடுவார்களோ என்ற பயம் அவருக்கு!' இது சிலர் கருத்து. அது தவறு. தன் கீழ் உள்ளவர்கள் தன் கருத்துக்கு மாறாகப் போய்விடுவார்களோ என்ற எச்சரிக்கை உணர்ச்சியே அது!

ஒருமுறை பேரறிஞர் அண்ணா அவர்கள் மூதறிஞர் ராஜாஜியைப்பற்றி விடுதலையில் எழுதிய தலையங்கத்தின் பெருமையை உணர்ந்த பெரியார் தனக்குக் கடுங்காய்ச்சலாக இருந்தபோதும் அண்ணாவை அழைக்கச் செய்யாமல் தானே மாடிப்படியேறிப் போய்ப் பாராட்டினார்.

அண்ணா அவர்கள் மறைந்தவுடன் வானொலிப்பேச்சில் பெரியார் அவர்கள் அண்ணாவை "*மகாத்மா*" என்று அழைத்தார்கள். தன் மாணவனை மகாத்மா என்று அழைத்த ஒருவரை இவ்வுலக வரலாறு கண்டதுண்டா? இருக்கலாம். ஆனால் அப்படி அழைத்தவரும் ஒரு மகாத்மா அல்லவா? அப்படிப்பட்ட வரலாறு ஏது? எனவே அவர் பிறரை வளர விடாத அளவுக்குப் பொறாமை நெஞ்சினரல்லர்.

தன் போர் முகாமில் அடிப்பட்ட வீரர்களைப் பார்க்கப் போனாராம் நெப்போலியன், ஒரு வீரனைப்பார்த்து "உனக்கு இதற்குமுன்பு நடந்த போரில் காலில் காயம் பட்டதல்லவா?" என்று கேட்டான். காயம் வடுவாகிவிட்டது. அடிபட்டவனுக்கு அது மறந்துபோய்விட்டது. ஆனால் நெப்போலியன் நெஞ்சில் பட்ட அக்காயம் மறக்க முடியாதாயிற்று இலட்சக் கணக்கான வீரர்களில் யாரோ ஒருவனுடைய காயத்தைக்கூட நினைவு கொள்ளும் நெப்போலியனின் இரக்கக் குணம் போல் பெரியாருக்கும் நிறைய உண்டு.

சிக்கல் என்று ஒரு சிறிய ஊர். அவ்வூரின் திராவிடக் கழகத் தலைவர் திரு. நாகப்பன் அவர். அவர் எப்போதோ திருடன் ஒருவனால் காயப்பட்டுவிட்டார். இதைப் பெரியார்

எப்போதோ எங்கேயோ போன போது கேள்விப்பட்டிருக்கிறார்! பசுமையாக நினைவுகொண்டு பிறகு எப்போதோ ஒருமுறை இவரைப் பார்க்க வந்தார்! இப்படி எத்துணையோ பல தோழர்கள் உண்டு அத்தோழர்கள் எங்கோ ஒரு மூலையில் இருந்தாலும் அவர் வீட்டுக் குழந்தைகளைக் கூட அவர் மறப்பதில்லை.

ராஜாஜியும் பெரியாரும் இரு துருவங்கள். ஆனால் இருவரும் தம் கொள்கைகள் சிலவற்றை மாற்றிக்கொண்டு விட்டனர் என்பதில் ஒன்றுபட்டவர்கள். கொள்கையைச் சிறிது மாற்றிக் கொண்டபோது தம்முடைய அறிவின் நுணுக்கத்தால் சமாதானம் சொல்வார் ராஜாஜி! ஆனால் பெரியார் அழுத்தமாக இதுதான் இப்போதைக்கு ஏற்றது என்பார். இது அவரின் துணிச்சலுக்கு எடுத்துக் காட்டாகும்.

மேடைகள் அவருக்கு நூல் நிலையங்கள்! ஊர் சுற்றுவது அவருக்கு உறக்கம்! போராடுவது அவருக்குப் பொழுது போக்கு! சாதி அவருக்குச் செருப்பு! தன்மானம் அவரின் கைத்தடி! கடவுள் எதிர்ப்பு அவரின் கருப்புச்சட்டை! பண்பாடு அவரின் வெண்தாடி! அவரின் புன்சிரிப்பு எதிரிகளுக்குப் புகையும் எரிமலை!

யாராலும் இப்படி வாழ முடியாது! வாழ்ந்த வரலாறு இதற்குமுன் இல்லை. அவர் ஓர் அதிசய மனிதர்! அவர் இங்கே பிறந்தது நாம் செய்த பாக்கியம்!

தந்தை வாழிய பல்லாண்டு.

ஒப்பற்ற நீதிபதி.

தவறு செய்கிறோமா இல்லையா என்பதை ஒரு நீதிபதி பல நாள் வக்கீல் வாதத்தை வைத்துக் கண்டுபிடிப்பதை விட, உள நூல் ஆராய்ச்சிக்காரர் விஞ்ஞான மகிமையால் தவறு செய்கிறோமா இல்லையா என்று கண்டுபிடிப்பதை விட– தவறு செய்கிறோமா இல்லையா என்பதைச் சொல்கிற ஒப்பற்ற நீதிபதி உண்டென்றால் அது மனச்சாட்சிதான்!

—தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்.

பணி புரிவோம் வாரீர்

அ. மு. சுந்தரராசன்,
நூலகர், கன்னிமாரா பொது நூலகம், சென்னை.

"மனித ரெல்லாம் அன்பு நெறி காண்பதற்கும்
மனோ பாவம் வானைப் போல் விரிவடைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சக மக்கள் ஒன்றென்பதுணர்வதற்கும்
இனிதினி தாய் எழுந்த உயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர் தரு சுவடிச் சாலை;
புனித முற்று மக்கள் புது வாழ்வு வேண்டில்
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்"

எனப் புதுவைக் கவிஞர், நம் புரட்சிக் கவிஞர் அன்று கண்ட உயர்கனவினைச் செயலாக்குவதே போல் இன்று நாட்டில் பல்லாயிரக் கணக்கான நூலகங்கள் நகரங்களில் மட்டுமல்லாது பட்டி தொட்டிகளிலெல்லாம் அறிவுப் பணியென்னும் ஆக்கப்பணியில் ஆரவாரமின்றி அமைதியுடன் ஈடுபட்டிருப்பது கண்கூடாகும்.

வளர்ந்து வரும் இன்றைய விஞ்ஞான உலகில் நூலகங்கள் இன்றியமையாத அமைப்புக்களாக விளங்குகின்றன. எனவே நாடும் மக்களும் நூலகங்களிலிருந்து பல்வேறு பயன்களை எதிர்நோக்கியிருக்கின்றனர். அவை எவையெனப் பார்க்கலாம்.

அறிவுக் கருவூலம்

சிந்தனையாளர்கள் அறிஞர் பெருமக்கள் இடையருத முயற்சியுடனும் அரும் பெரும் உழைப்புடனும் உருவாக்கும் உயர் நூல்களையெல்லாம் அறிவுக் கருவூலங்களாக விலை மதிக்க வொண்ணுத செல்வங்களாகச் சேகரித்து பாதுகாத்து பலருக்கும் பயன்படும் வகையில் வினியோகித்து அறிவுப் பணியாற்றுவது இன்றைய நூலகமாகும்.

கல்விக் காவலன்

இன்றைய நூலகமானது மக்கள் அனைவரும் ஆசிரியரது உதவியின்றி தாங்களாகவே தொடர்ந்து வாழ்நாள் முழுவதும் கல்வி பெறுவதற்கும் அவ்வாறு பெற்ற கல்வியறிவினை வளர்த்துக் கொள்வதற்கும் உறுதுணையாக இருப்பதுடன் உலக அறிவுத்துறைகள் யாவற்றிலும் இன்று வரை கண்டு படிக்கப்பட்டுள்ள உண்மைகளையும், புதுமைகளையும் அறிந்து பயன் பெறுவதற்கும் வாய்ப்பளிக்கின்றது.

அரசியல் ஆசான்

மனிதன், தான் சார்ந்துள்ள சமுதாயத்தில், நாட்டில், உலகில் நிலவும் பலதரப்பட்ட அரசியல் கருத்துக்களையும் பயனுள்ள தத்துவங்களையும் விருப்பு வெறுப்பின்றி நடு நிலைமையுடன் அறிவதற்கும் அதன் அடிப்படையில் தனது அரசியல் உரிமைகளை உணர்ந்து பெற்று பாதுகாப்பதோடு தனது கடமைகள் எவையென நன்கறிந்து நல்லதோர் குடிமகனைச் செயல் படவும் இன்றைய நூலகம் வழி காட்டுகிறது.

பொருள் வளம் காண்போன்

பலதுறை சார்ந்த ஆராய்ச்சி விற்பன்னர்களது விஞ்ஞான மேதைகளது புத்தகம் புதிய கண்டு பிடிப்புக்களையும் பயனுள்ள அறிவுரைகளையும் ஒன்று சேர்த்து பல்வேறுபட்ட தொழிலதிபர்களுக்கும் உடனுக்குடன் கொடுத்துதவி அவர் களிடையே உற்பத்தித் திறனை ஊக்குவித்து நாட்டின் பொருள் வளம் பெருகுவதற்கு நூலகம் இன்று உதவு கிறது.

இலக்கியம் காப்போன்

மனித சமுதாயத்தின் அரும் பெரும் இலக்கியச் செல்வங் களையெல்லாம் ஒன்று சேர்த்து நிரந்தரமாகப் பேணிப் பாது காத்து இன்றைய சமுதாயத்தினர்க்கு வினியோகிப்பதுடன் எதிர் காலச் சமுதாயத்தினர் பயனிற்காகப் பாதுகாத்து மானியத்தின் கலை கலாச்சார வளர்ச்சிக்கு உதவுவதுடன்

மக்களது நாகரிகம், பண்பாடு ஆகியவைகளது உயர்விற்கும் நூலகமானது உதவுகின்றது

பயனுள்ள ஓய்விற்கு வழிகாட்டி

இறுதியாக நாட்டு மக்களனைவரும் தங்களது ஓய்வு நேரத்தினை தீங்கற்ற முறையில் பயனுள்ள வழியில் கழிப்பதற்கு இன்றைய நூலகங்கள் உதவுவதுடன் விழிப்புணர்ச்சி பெற்ற தரமான மக்களினம் உருவாவதற்கு ஏற்ற நல்லதோர் சூழ்நிலையினையும் உருவாக்கி வருகின்றன.

வேண்டுகோள்

நாட்டில், கல்வி அறிவு வளர்ந்து மக்களது தரம் உயர, நாட்டின் பொருள் வளம் செழிக்க அரசியல் நாகரிகம் உயர, இலக்கிய உணர்வு வளர உறுதுணையாக இருக்கும் நூலகங்களில் பணிபுரியும் வாய்ப்புப் பெற்ற நண்பர்கள் அனைவருக்கும் அன்பான வேண்டுகோள் ஒன்று

அதுவும் புரட்சிக் கவிஞரின் வரிகளிலேயே!!

“வாசிக்க வருபவரின் வருகை ஏற்றும்
மரியாதை காட்டி அவர்க்கிருக்கை தந்தும்
ஆசித்த நூல்தந்தும் புதிய நூல்கள்
அழைத்திருந்தால் அதையுரைத்தும் நாளும் நூலை
நேசித்து வருவோர்கள் பெருகும் வண்ணம்
நினைப்பாலும் வாக்காலும் தேகத்தாலும்
மாசற்ற தொண்டிழைப்பர்! சமுதாயச் சீர்
மறுமலர்ச்சி கண்டதென முழக்கஞ் செய்வர்!”

எனப் பணி புரிவோம் வாரீர் என அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

“ அரசாங்க வரியையும் மத வரியையும் கணக்குப்
பார்த்தால் அரசாங்க வரியைவிட மத வரியே
அதிகமாகும் ”

—*தந்தை பெரியார்.*

பகுத்தறிவு மலர...

க. சோமசுந்தரம்,
செயலாளர், தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம்

இது பகுத்தறிவு குறித்து அதிகம் பேசப்படுகின்ற காலம்

நல்லது, பகுத்தறிவு என்பது என்ன? ஏற்கெனவே பழக்கத்தில் உள்ளனவற்றை எல்லாம் வெறுத்து விலக்குவதும் தன் மனம் போன வழியே நடப்பதற்கு உள்ள சுதந்திரமுமே பகுத்தறிவு எனப்படுவதா? அந்நிலையில் மரபு, கலாச்சாரம், பண்பு ஆகியவற்றின் இடம் என்ன?

இது நன்மை, இது தீயது என்று பகுத்து உணரும் திறத்தையே பகுத்தறிவு என்கிறது. ஒருவருக்கு நலன் தரும் ஒரு செயல், பழக்கம், எண்ணம் மற்றொருவருக்கு வேண்டத் தகாததாக இருக்கக்கூடும் அப்படியானல் ஒன்றுக்கொன்று மாருன கருத்துக்களும் செயல்களும் தம்முள் முரணனதா? அந்நிலையில் சமுதாய ஒழுங்கு முறைகளைக் கட்டிக் காப்பதற்காகச் சட்டதிட்டங்களைக் கொண்டு ஒருவனுடயை உரிமைகளைக் கட்டுப்படுத்துவது ஒரு சிலரோ அல்லது அரசோ பகுத்தறிவின்மீது செலுத்தும் ஆதிக்கமே ஆகாதா? சமுதாயம் முழுவதன் நன்மைக்காகவும், அது ஒழுங்குடன் இணக்கமாக இயங்குவதற்காகவும் சில கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டுவதும் அவற்றை அனைவரும் உவந்து ஏற்பதும் அவசியம் என்று கூறப்படலாம்.

ஒருவன் ஒன்றை உவந்து ஏற்பதற்கு அவனுடைய சிந்தனை ஆற்றல் மிக்கதாக இருக்கவேண்டும். ஆம், ஒருவனிடம் உள்ள சிந்திக்கும் ஆற்றலே பகுத்தறிவின் அடிப்படையாகும் (basically & individual). எனவே ஒவ்வொரு மனிதனும் தானே சிந்தித்து முடிவுக்கு வரும் திறமை பெற்று, தானே தன்னுடைய உரிமைகளை – அவசியமான அளவுக்கு விருப்பத்தோடு ஒப்படைக்க தக்கவனுனலன்றி, சமுதாயமும் சட்டங்களும் அவனளவில் உரிமைகளைப் பறிப்பனவேயாகும்.

இதிலிருந்து ஓர் உண்மை பெறப்படுகின்றது. பகுத்தறிவு என்பது ஒரு சிலருக்கு மட்டுமே (Privileged few) கைவரக்கூடிய ஒன்றல்ல என்பதுதான் அந்த உண்மை. மனிதனுகப் பிறந்த ஒவ்வொருவனும்—அதிலும் சிந்திக்கும் ஆற்றல் படைத்த ஒவ்வொருவனும் பகுத்தறிவாளனே ஆவான்.

மனிதன் ஆறறிவுடையவன் என்பது சூத்திரம். ஆருவது அறிவு - பகுத்தறிவு - கற்றல், சிந்தித்தல், பட்டறிதல் என்ற வகையில் படிப்படியாக வளர்க்கப்படுவது. ஆதலின் கற்றலே பகுத்தறிவின் அஸ்திவாரம். ``நான் உணர்ந்து கொண்டேன்; அறிந்து தெளிந்து விட்டேன். எனவே, நான் சொல்கிறபடி நீ நட'' என்று ஒரு பகுத்தறிவாளன் சொல்வாஞனல், உலகில் ஏற்கெனவே உள்ள சமயக் கூட்டங்களோடு இவனும் புதியதொரு சமயக் கும்பலைத் தோற்றுவிக்க முயல்கிருன் என்றே பொருள்.

ஆகவே, தமிழர்கள் பகுத்தறிவாளர்களாக மலர்ச்சி பெறுவதற்கு முதற்படி தமிழன் ஒவ்வொருவனும் கற்றவனுக (வெறும் எழுத்தறிவு பெற்றவனுக மட்டும் அல்ல) ஆவதேயாகும்.

எழுத்தறிவு என்பது வேறு. கல்வி என்பது வேறு. கற்பதற்கு எழுத்தறிவு வழிவகுக்கிறது. அவ்வளவே; அதுவே இதுவாகாது. கல்விக் கூடங்களில் பயிலப் பெறுவது எழுத்துக்களை (அதன் சின்னங்களை (Symbols) தொகுத்தலும் படித்தலும் எழுதுதலும் அவற்றின் அகராதிப் பொருளைத் தெரிந்து கொள்ளுதலுமேயாகும். கல்வியின் நோக்கம் இதனினும் பெரிது. கற்பவனது அறிவின் அகலத்தை விரிவாக்குதலும், அவனுடைய சிந்திக்கும் ஆற்றலை ஆழமும் அகலமும் உடையதாக்கவும். அவன் தன்னையும் மனித இனத்தையும் உலகையும் ஆழ்ந்து உணர்வதற்கு உதவுதலுமே கல்வியின் நோக்கமும் பயனுமாகும். ஒருவனுடைய கல்வியோடு அவனுடைய சிந்தனையும் பட்டறிவும் (ஸ்ருதி, யுக்தி, அனுபவம்) ஒன்றும் போது அதிலிருந்து பிறப்பது அறிவு. தன்னையொத்த பிறரது பட்டறிவும், சிந்தனையும், தனது சூழலும் ஒருவனுடைய அறிவோடு மோதும்போது பிறப்பது பகுத்தறிவு.

காலங் காலமாகத் தொடர்ந்துவரும் மனித சமுதாயத்தின் பலவகையான பட்டறிவுகளைத் தொகுத்து வழங்குவன நூல்கள். அவற்றின் எண்ணிக்கையும் பெரிது; துறைகளும் பல வகைப்பட்டவை. எத்தனை வசதி மிக்கவனாயினும் ஒருவனே அவ்வளவையும் சேகரித்து, சேமித்து, காத்தல் என்பது இயலாதது. அவ்வரும் பணியையே நூலகங்கள் செய்கின்றன—செய்ய வேண்டும். எத்துணை சிறியதாயினும் ஒரு நூலகத்தில் ஒவ்வொரு துறையிலும் சிறந்தது எனக் கருதப்படும் நூல்கள் அனைத்தும் இடம் பெற்றாலே அது நூலகம் என்ற பெயருக்கு அருகதையுடையது. இவ்வாறான நூல்கள் அனைத்தும் நூலகங்களில் இடம்பெறச் செய்யப்பாடுபடுவது பகுத்தறிவாளர்களின் தலையாய கடமை. ஏற்கெனவே குறிப்பிட்டது போன்று மனிதன் ஒவ்வொருவனும் தானே சிந்திக்கவும் முடிவெடுக்கவும் ஆற்றல் பெற்றவனாகச் செய்தலே பகுத்தறிவு ஓர் இயக்கமாக வெற்றிபெறும்.

———

" விதிப்படி எல்லாம் நடக்கும் போது வீணாக
ஆண்டவன் ஏன் " —கலைஞர் கருணாநிதி

* * * *

" மதங்கள் என்பவைகளெல்லாம் மனிதர்களால்
உண்டாக்கப்பட்டவைகளேயாகும், "

—தந்தை பெரியார்

* * * *

" செல்வம், மதத்தின் பெயரால் கோயிலாகவும்
ஆண்டவன் சொத்தாகவும் முடங்கிக்கிடக்கிறது "

—அறிஞர் அண்ணா

* * * *

வாளும் மாநில சுயாட்சியும்.

எப்படி வாள் உறைக்குள் அடங்கியிருக்கிறதோ அதைப் போலத்தான் நாம் கேட்கிற மாநில சுயாட்சியும் மத்திய கட்டாட்சிக்குள் அடங்கியிருக்கும். —டாக்டர் கலைஞர்

"நூலகம் வளரும்"

இர. தனசேகரன்,
(முன்னாள் நூலக வாசகர் மன்றச் செயலர், முத்துப்பேட்டை)

"அறிவுத் தேரின் ஒரு பக்கத்துச் சக்கரம் கல்விக்கூடம் மறுபக்கச் சக்கரம் நூலகம்" என அறிஞர் ஒருவர் கூறினர். கல்விக்கூடம் ஒரு குறிப்பிட்ட பாடத்தைப் பற்றி, குறிப்பிட்ட நேரத்தில், ஆசிரியர்களால் போதிக்கப்படும் நிலையிலுள்ளது. ஆனல் நூலகம், தன்னிச்சையாக, தன் சிந்தனைத் திறத்தால் தானே படித்தறியும்; பகுத்தறிவும் ஆற்றலை வளர்க்கும் அறிவுக்கூடமாகும். அதில் நூலகர் வழிகாட்டியாக விளங்குகிருர். நூலகங்களைப் பயன்படுத்தி வாசகர்கள் தன் அறிவாற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டியே நாட்டில் மூலைமுடுக்கெல்லாம் 'நூலகங்கள்' அமைக்கப்படுகின்றன. அச்சிறப்பினையுணர்ந்து, நூலகம் பொழுது போக்கிடம் எனக் கொள்ளாமல் பொழுதைப் பயனுள்ளதாக அமைத்துக் கொள்ளுமிடம் என அறிதல்வேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் மனம் மாறி, திசை திரும்பி புதுமை, நாகரிகம் என்ற இனம் புரியாப் பாதையில் செல்ல வைக்கும் பல பத்திரிகைகளைப் பார்க்கிருேம். புத்தகங்களை இனக்கவர்ச்சியில் இளைஞர்களை சுண்டியிழுக்கும் முறையில் எழுதும் கீழ்த்தர எழுத்தாளர்களும் நிறைந்திருக்கிருர்கள். இப்படி எத்தனையோ பத்திரிகைகளும், புத்தகங்களும் இருப்பினும் தரமான, தூய்மையான அறிவூட்டும் நல்ல நூல்களையே படிக்கவேண்டும் என்ற எண்ணம் இளைஞர்கள், முதியோர்கள் எல்லோரின் இதயத்திலும் தோன்ற வேண்டும் அந்த எண்ணம் ஏற்பட வழிகாட்டுவது நூலகங்களே. எண்ணம் உயர்ந்தால்தான் நிலை உயரும். எண்ணமும், நிலையும் உயர, வழிகாட்டும் ஒளி விளக்காய் விளங்கும் நூலகங்களைப் பயன்படுத்தி, இன்பம் துய்ப்பது நம் கடமையாகும்.

நூலகத்தை அரசினர்தானே நடத்துகிருர்கள் எனப் பொதுமக்களும், வாசகர்களும் எண்ணி ஒதுங்கிவிடுதல் கூடாது. நூலக வளர்ச்சியில் பொதுமக்கள், வாசகர்கள், அலுவலர்கள், ஆணைக்குழுவினர் யாவருமே பெரும் பங்கு கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் நூலகத்தின் —

நோக்கம் நிறைவு பெற்றதாகும். நூலகர்கள்தான் நூலக வளர்ச்சியின் தூண்டுகோல்கள். ஒவ்வொரு நூலகரும், தினமும் வாசகர்களை சந்திக்கிறார்கள். நூலகத்தை அறிஞர்கள், கவிஞர்கள் அறிவியலறிஞர்கள் ஆகியவர்களின் படங்களை மாட்டியும், பொன்மொழிகள் எழுதிவைத்தும் நூலகத்தை கவர்ச்சியுடையதாக அமைக்கலாம். வாசகர்களிடம் நெருங்கிப் பழகி, இன்முகமுடன் பேசி, கட்சிப் பாகுபாடின்றி அணுகி நூலகத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். ஒவ்வொரு நூலகத்திலும் ஒரு "வாசகர் மன்றம்" அமைத்தல் அவசியம். அவ்வாசகர் மன்றம் பெயருக்கென்றில்லாமல் செயல்படக் கூடியதாக அமையவேண்டும்; செயல் "பட்டு"விடச் செய்யக்கூடியவர்களை அணுகவிடக் கூடாது. நூலக வளர்ச்சியில் ஆசிரியர்கள் பெரும் பங்கு கொள்ளல் அவசியம். மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள், மாணவர்கள் துணை இன்றியமையாதது. நூலகம் நூற்றுறைகையில் பெருக "வாசகர் மன்றத்தின் சார்பில் நூலகக் கண்காட்சிகள் நடத்துதல் பொதுமக்களிடம் இலவசமாக நூல்கள் வாங்கி வழங்குதல், இலக்கியச் சொற்பொழிவுகள் நடத்துதல் போன்றவற்றால் நூலகத்தை உயிரூட்டமுள்ளதாகவும், உன்னத அறிவுப் பூங்காவாகவும் அமைக்கலாம்.

நூலகர்கள் ஒவ்வொரு நாளும் உறுப்பினர்களைச் சேர்ப்பதில் ஊக்கம் காட்டவேண்டும். நகரில் உள்ள அனைத்து அலுவலர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள் அனைவரையும் அணுகும் முறையில் அணுகி உறுப்பினர்களாக்கிவிட வேண்டும். மகளிரைப் பெருமளவில் உறுப்பினர்களாக்க வேண்டும். பள்ளிக்கூட ஆரம்ப நாட்களில் மாணவர்கள் சேர்க்கையின் பொழுது தலைமையாசிரியர்களின் துணையுடன் பெற்றோர்கள், மாணவர்கள் இருவரையுமே உறுப்பினர்களாக்க ஒரு வாய்ப்பும் உண்டு. பள்ளிகளில் நூலகங்கள் இருப்பினும், தனி நூலகங்கள் பலதரப்பட்ட இலக்கியங்கள், அறிவியல் நூல்கள், வணிக இயல் நூல்கள், வானவியல், புவியியல் நூல்கள், கவிதைகள், கட்டுரைகள் இவை போன்ற எவ்வளவோ நூல்களைக் கொண்ட அறிவுப் பெட்டகமாய் விளங்கும் தனித்தன்மையை அறியச் செய்தல் வேண்டும்.

உயர்நிலைப்பள்ளிகளில் நூலகப்பயிற்சிப் பெற்ற 'நூலகர்' களையே அமைத்து, நூலகம் சிறப்புற செயல்படச் செய்தால் தான் அதன் பயன் முழுமையுடையதாக அமையும். அப்படி நியமித்தால் நூலகத்தைப் பயன்படுத்தவும், நூலின் பயனை மற்றவர்கள் நுகரவும் செய்ய அந்நூலகர் பெரிதும் அக்கரையும் எடுத்துக்கொள்வார். அவர் பணியின் தன்மையை ஆண்டுத் தணிக்கையில் மாவட்டக் கல்வி அலுவலர்களும் கண்காணிப்பதால் செயலும் சீர்படும் என்பது என் எண்ணம்.

ஆண்டுதோறும் "நூலக வார விழாக்கள்" பெயருக்கென்றில்லாமல், சிறப்பாக நடாத்தி பொதுமக்களின் கவனத்தை நூலகத்தின்பால் ஈர்க்க வேண்டியது நூலகர்களின் தலையாயக் கடமையாகும். நூலகர்கள் 'வாசகர் மன்றத்'' தினரின் துணைகொண்டு ஆசிரியர்கள், மாணவர்கள், அறிஞர்கள் ஊராட்சி நகராட்சி மன்றத்தினர் ஆகியவர்களை அணுகி இலவசமாக நூற்களை வாங்கி நூலகத்தைப் பெருக்கச் செய்யவேண்டும்.

நூலகத்தின் சிறப்பை உணர்ந்து நூலகம் வளர பயனுள்ளதாக அமைய எல்லோரும் பொறுப்பேற்றல் அவசியமாகும். நற்பணியாற்றும் நம் தஞ்சை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் சிறப்பை இங்கு நோக்கி மகிழ்தல் நன்று. நம் மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவர் திருமிகு ந. தருமலிங்கம் அவர்கள் நூலகத்தை நடாத்திவரும் பாங்கு தமிழகத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது. அவர்கள் ஒரு சிறந்த பத்திரிகையாளராகவும், பண்பட்ட பேச்சாளராகவும், இனிய நற்குண சீலராகவும் விளங்குவதால் பலதரப்பட்டவர்களையும் ஈர்த்து செயலில் சீர்மையோடு விளங்குகிறார்கள். அவர்கள் ஆணைக்குழுத் தலைவரான பின்னர் கோயில்களில் நூலகங்கள், மருத்துவ மனையில் நூலகங்கள் என நூலகம் வளர்ச்சி பெற்றுள்ளன. நூலக வளர்ச்சியில் அக்கறைகொண்ட நாம் தஞ்சை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் தலைவர் திருமிகு ந. தருமலிங்கம் அவர்கட்கும், செயலர் திருமிகு எல் இராமச்சந்திரன், பி. ஏ., பி. டி., (மாவட்டக் கல்வி அதிகாரி) அவர்கள், மாவட்ட நூலகர் திருமிகு ஆ. அருணாசலம், பி. ஏ; அவர்கள் மற்றும் சீரிய செயலாற்றும் நூலகர்கள், பணியாளர்கள், மாவட்ட நூலக அலுவலர்கள் அனைவருக்கும் நன்றியும், பாராட்டும் செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம்.

வளர்க நூலகம்! பெருகுக அறிவியக்கம்!

வாழ்க பெரியார் !　　　　　　　　வளர்க பகுத்தறிவு !

தன்னேரில்லாத் தமிழர் தலைவர்

தந்தை பெரியார் அவர்களின்

95-வது பிறந்த நாளில்

எம் நல்வாழ்த்துக்களையும்

காணிக்கையாக்குகிறோம்.

மீனா புத்தக நிலையம்

2/1, நைனான் தெரு,

சென்னை - 600018.

முத்தையா நிலைய வெளியீடுகள்.

சொல்வளமும், பொருட்சிறப்பும்
நிறையப் பெற்றவை

முகவரி :

முத்தையா நிலையம்
477, பூந்தமல்லி நெடுஞ்சாலை,
பிளவர்ஸ் சாலை (அஞ்சல்)
சென்னை-600084.
தொலைபேசி : **666669.**

தொண்ணூற்றைந்தாம் ஆண்டில் நுழையும்
பகுத்தறிவுப் பேரொளி
தந்தை பெரியார் அவர்கட்கு
எங்கள் நல்வாழ்த்துக்கள் !

எங்கள் புதிய வெளியீடுகள் :

வெற்றித் திருநகரின் வீரச்சிற்பிகள்	டி. என். ராமச்சந்திரன் ரூ.	4-00
கடவுளுக்காகத் தேடி அலைந்த கருப்புப்பெண்	ஜார்ஜ் பர்னுர்ட்ஷா	3-50
மூலதனம்	ம. சிங்காரவேலு, பி. ஏ., பி. எல்., ப. ஜீவானந்தம்	2-00
அறிவுக்கு விருந்து	டி. என். ராமச்சந்திரன்	2-00

புது இலக்கியப் பதிப்பகம்,
61, தம்புச்செட்டித் தெரு, சென்னை-1.

கலைமகள் வெளியீடுகள்

★ இலக்கிய மதிப்புள்ளவை

★ தரத்தில் சிறந்தவை

★ சிறந்த ஆசிரியர்களால் எழுதப்பெற்றவை

★ குறைந்த விலையுள்ளவை

இலக்கியம், சமயம், சிறுகதை, நாடகம், நாவல், கட்டுரைகள், பயணம், சரித்திரம், விஞ்ஞானம், விவசாயம் முதலிய பல துறைகளிலும் 350 க்கும் அதிகமான புத்தகங்கள், சிறுவர்களுக்கென்றே வெளியிடப்பட்ட **கண்ணன் வெளியீடுகள்.**

★ *புத்தகம் வாங்கும் தனிப்பட்டோருக்கு பயனும், லாபமும் தருவது எமது* ***"குடும்ப நூல் நிலைய திட்டம்"***

★ *பள்ளி நூல் நிலையங்கள் புத்தகங்கள் வாங்கும்பொழுதே கமிஷனுடன், ஒரு பரிசும் பெற வாய்ப்பளிப்பது எமது* ***"பள்ளி நூல் நிலையப் பரிசுத் திட்டம்"***

விவரங்களுக்கும், விலைப்பட்டிக்கும் எழுதுக.

கலைமகள் காரியாலயம்

மயிலாப்பூர், சென்னை-600004.

சாகித்ய அகாதமியின் பரிசு பெற்ற
எமது வெளியீடுகள்

1. "வேங்கையின் மைந்தன்" 12–50
(அகிலன்)

2. "சமுதாய வீதி" 5–75
(நா. பார்த்தசாரதி)

3. "அன்பளிப்பு" 4–00
(கு. அழகிரிசாமி)

தமிழ்ப் புத்தகாலயம்,
576, பைகிராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி : : சென்னை–600005.

தமிழகத்தின் தலைசிறந்த பதிப்பகங்களில் ஒன்று
மணிவாசகர் நூலகம்,
சிதம்பரம்.

எங்கள் நூல்கள்: அறிஞர்களால் எழுதப்பெற்றவை
மக்கள் வரவேற்பினையும் அரசின் பரிசுகளையும் பெற்றவை
தமிழ்ப் பதிப்புலகிற்குப் புகழ் சேர்ப்பன

கம்பர் – வ. சுப. மாணிக்கம் உரையாசிரியர்கள்–மு. வை. அரவிந்தன்
இலக்கிய விளக்கம்— ஷை பரிபாடல் திறன்—டாக்டர் சாரங்கபாணி
உப்பங்கழி— ஷை
குறள் விருந்து ஷை
ஒரு நொடியில்— ஷை
வீரர் உலகம் — கி. வ. ஜகந்நாதன்
இலக்கியத் திறனாய்வு ப. கோதண்டராமன் கவிபாடலாம்– ஷை
மாணிக்க விருந்து— ஷை காப்பியத்திறன்—
சோம. இளவரசு
மும்மணிகள்— ச. மெய்யப்பன்

மணிமேகலைப் பிரசுரத்திற்கு ஒரு தடவை நேரில் வாருங்கள்.
எல்லாப் புத்தகங்களையும் பார்க்கலாம்.

தமிழ்வாணன்

நூல்கள்

புதிய நூல்கள் அறிவுக் கட்டுரைகள்

உங்களுக்குப் பிறகு உங்கள் குடும்பம் ?	2—00
நமக்கு நாமே துணை	2—00
சரியான முடிவுக்கு வர முடியவில்லையா ?	2—00
நாம் முன்னுக்கு வராததற்கு நாமே காரணம்	2—00
வரவுக்கு மேல் செலவா ?	2— 00

உடல் நல நூல்கள்

குழந்தை வளர்ப்பது எப்படி ?	2—00
வைத்திய சிலவைக் குறைக்கச் சில வழிகள்	2—00
வெட்கப்பட்டால் வியாதிகள் தீருமா ?	2—00
எப்போதும் களைப்பாய் இருக்கிறதா ?	2—00
கண்	2—00
பெண்களின் நோய்கள்	4—00
பிள்ளைகள் பிறக்காமலிருக்கச் சில வழிகள்	2—00
மணமானவர்கள் மனம் மகிழ	3—00

சங்கர்லால் துப்பறியும் நாவல்கள்

சங்கர்லால்	2—00
சங்கர்லால் துப்பறிகிறார்	3—75
இன்னொரு செருப்பு எங்கே ?	3—25
ஆந்தை விழிகள்	5—50
எஸ். எஸ். 66	5—75
ஹலோ சங்கர்லால்	8—75
மர்ம மனிதன்	6—00
இரகசியம்	5—00
நாற்பதினாயிரம் ரூபாய்	2—00
டோக்கியோ ரோஜா	1—50
இருண்ட இரவுகள்	7—50

இந்தப் புத்தகத்தில் எந்தப் புத்தகம் தேவையோ, அந்தப் புத்தகத்தின் பெயரைக் குறிப்பிட்டு, அந்தப் புத்தகத்தின் விலையை எங்களுக்கு மணியார்டர் செய்யுங்கள். எங்கள் செலவில் உங்களுக்குப் புத்தகத்தை அனுப்பி வைக்கிறோம்.

மணிமேகலைப் பிரசுரம்

4, தணிகாசலம் செட்டி ரோடு, தி. நகர், சென்னை—17.
போன். 442926.

சிறப்பு மலருக்கு
விருப்பம்மிகு வாழ்த்துக்கள்!

அசோகன் பதிப்பகம்

சென்னை.

★ அறிவை வளர்க்கும் அரிய புத்தகங்கள்!

★ அருந்தமிழ் வளர்க்கும் சிறந்த புத்தகங்கள்!

★ மாணவர்க்கேற்ற உயர்ந்த புத்தகங்கள்!

மற்றும்,

கலை, இலக்கியம், வரலாறு, கவிதைகள், கதைகள்
ஆகிய அனைத்தும் படைத்தளிக்கும்
அறிவுப் பண்ணை **அசோகன் பதிப்பகம்!**

அசோகன் பதிப்பகம்,
புத்தகம் வெளியிடுவோர் — விற்பனையாளர்,
56, உஸ்மான் சாலை, தியாகராய நகர்,
சென்னை - 17.

நான்காவது திருத்திய பதிப்பு.

புதிய பொலிவோடு வெளிவந்துவிட்டது

பேரறிஞர் அண்ணாவின் பெருவாழ்வு

அ. மறைமலையான் எழுதியது.

பேரறிஞர் அண்ணாவின் முழு வாழ்க்கை வரலாறு அற்புதமாக எழுதப்பெற்ற ஒப்பற்ற நூல்.

டாக்டர் கலைஞர் அவர்களின்
முன்னுரையுடன் கூடியது.

400 பக்கங்கள். | | அழகிய மூவர்ண அட்டை.

விலை ரூ. 5.

விவரங்களுக்கு:

வானதி பதிப்பகம்,

82/11, பாண்டி பஜார், சென்னை - 17.

நறுமலர்ப் பதிப்பகத்தின் நல்ல தமிழ் வெளியீடுகள்.

சென்னைப் பல்கலைக்கழகத் துணைப் பேராசிரியர்

டாக்டர்

சி. பாலசுப்பிரமணியன், எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.

அவர்கள் எழுதியுள்ள தமிழ் நூல்கள்.

1.	இலக்கிய அணிகள்	ரூ. 7–00
2.	தமிழ் இலக்கிய வரலாறு	ரூ. 4–00
3.	மனோன்மணீயம்	ரூ. 3–50
4.	வாழையடி வாழை	ரூ. 4-00
5.	உருவும் திருவும்	ரூ. 2–50
6.	கட்டுரைவளம்	ரூ. 2–75
7.	காரும் தேரும்	ரூ. 2–75
8.	முருகன் காட்சி	ரூ. 2–75
9.	கொடுத்துச் சிவந்த கைகள் (கோவி. மணிசேகரன்)	ரூ. 2–00
10.	செம்புலப் பெயல் நீர் (மா. செல்வராசன்)	ரூ. 1–00

விற்பனை உரிமை : **பாரி நிலையம், சென்னை-1.**

பொது நூலகங்கள், பள்ளி நூலகங்கள்
முதலியவற்றிற்கு ஏற்ற இனிய நாவல்கள்,
வரலாறு, இலக்கியம், சிறுவர் நூல்கள்
முதலிய பல்துறை நூல்களும்

— எங்களிடம் கிடைக்கும் —

தரமான நூல்களைத் தமிழில் வெளியிடுவோர் :

தணிகைப் பதிப்பகம்

புத்தகம் வெளியிடுவோர், விற்பனையாளர்.

138 A, பவளக்காரத் தெரு,

சென்னை-1.

பூங்கொடியில் பூத்த மலர்கள்.

1. சிலப்பதிகாரத் திறனாய்வு - ம. பொ. சிவஞானம் 12-00
2. சான்றோரின் சாதனைகள் ,, 5-00
3. வண்ணத் தோகை - கவிஞர் கா. வேழவேந்தன் 6-00
4. இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - பெ. சு. மணி 12-00
5. ஞானதீபம் - சி. ஆர். ராஜம்மா 6-00
6. இவள் அல்லவா பெண் - சி. ஆர். ராஜம்மா 5-00
7. கொடி மலர்கள் - சி. ஆர். ராஜம்மா 5-00
8. அம்பிகா - பதி - துமிலன் 5-00
9. மனத்தடாகம் - டேவிட். சித்தையா 7-00
10. சிறைச்சாலை என்ன செய்யும் - டேவிட். சித்தையா 7-00
11. அமர் சோனுர் பங்களா - டேவிட். சித்தையா 5-00
12. புழுதியிலே புதுமலர் - நாகை தருமன் 5-00
13. இனிய வாழ்விற்கு இணையற்ற வழிகள் - நாகை தருமன் 2-50
14. ஒரே பிள்ளை - ,, ,, 5-00
15. வாழ்க்கைப் பந்தயம் - ,, ,, 4-00
16. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை ,, ,, 2-00
17. அறிவூட்டும் அன்பு வழிக் கதைகள் ,, ,, 2-25
18. கருணைத் தேவன் காந்தி மகான் - கவிஞர் மணிமொழி 1-75
19. தேன் கிண்ணம் - ,, ,, 1-50
20. நான் கேட்டேன் அவன் தந்தான் - பி. எல். ராஜேந்திரன் 4-50
21. மகளிர் மனம் கவர்ந்த முத்து - பி. எல். ராஜேந்திரன் 3-50
22. பொன்னுரம் ,, 6-00
23. உணர்ச்சிக் கலைஞர் உவமை நயங்கள் - பி. எல். ராஜேந்திரன் 2-00
24. அந்திரங்கம் ,, 5-00
25. உதிர்ந்த தாரகை ,, 7-50
26. அன்பு நெஞ்சம் - ப. செகதீசன் ,, 4-00
27. சுடர் விளக்கு - மூவேந்தன் 1-50

பூங்கொடி பதிப்பகம்

34, வி. எஸ். வி. கோயில் தெரு,
மயிலாப்பூர் :: சென்னை - 4.

எங்கள்

நல் வாழ்த்துக்கள்

பழனியப்பா பிரதர்ஸ்

திருச்சி-2 சென்னை-14 கோவை-1

சேலம்-1 மதுரை-1 தஞ்சை-1.

1971 - விருந்து

முன்னணி எழுத்தாளர்களின் புத்தகங்களை
வெளியிடுகிறோம்.

சுஜாதா, ரா. கி. ரங்கராஜன், பி. வி. ஆர். எஸ். லட்சுமி சுப்பிரமணியம், ஆர், சூடாமணி, ருக்மிணி, பார்த்தசாரதி, ஜோதிர் லதா கிரிஜா, மாரி-அறவாழி கே. ஜெயலக்ஷ்மி, சரோஜா ராமமூர்த்தி, கிருஷ்ணா. கல்பனா

இந்த ஆசிரியர்கள் எழுதிய புத்தகங்களை தஞ்சை மாவட்ட எல்லா கிளை நூலகங்களிலும் நீங்கள் சென்று படிக்கலாம்.

உங்கள் வீட்டிலே ஒரு நூல் நிலையம் அமைக்க வேண்டுமானால் எங்களிடம் நேரடி தொடர்பு கொள்ளுங்கள். **தள்ளுபடியுடன்** புத்தகங்களை அனுப்புகிறோம்.

விவரங்களுக்கு :

இமயப் பதிப்பகம்,

நாகப்பட்டினம்.

" களிப்பூட்டும் காலமெல்லாம் கற்பவர்கள் வாழ்வில்
விளையாட்டுத்துறை போற்றும் வழி எங்கள் நூல்கள்"

*

" தமிழுக்கு விளையாட்டுத் துறை புதிய துறை. தமிழிலக்கியங்களில் விளையாட்டுத் துறையில் தரமான புதிய நூல்கள் வெளிவர வேண்டும். இளைஞர்கள், மாணவர்கள், பொதுமக்கள் பயன் பெற வேண்டும் "

*

எங்களது உயர்ந்த நோக்கத்தின்
சிறந்த படைப்புக்களாக விளையாட்டுத்துறையில்
பல நூல்களை வெளியிட்டிருக்கிறோம்.

தேவைகளுக்கு எழுதுங்கள்.

*

ராஜ்மோகன் பதிப்பகம்.

தபால் பெட்டி எண். 4955.

தி. நகர், சென்னை-17.

தத்துவங்கள் 1008

யாவரும் படிக்க வேண்டிய
இதுவரை கண்டிராத மிக உயர்ந்த புத்தகம்
குரு சுராஜானந்தா அவர்கள்
இயற்றியது

வாழ்த்துரை — ஸ்ரீ சுப்ரமண்ய கனபாடிகள்
வாழ்த்துப்பா — ஸ்ரீ கிருபானந்த வாரியார்
அணிந்துரை — கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார்
மதிப்புரை — ஸ்வாமி குஹானந்தாஜி
சிறப்புரை — ஸ்வாமி நித்யானந்தம்

ஆஞ்சனேய நக்ஷத்திரமாலையும் அடங்கியுள்ளது.

விலை ரூ. 4-50

ஞானக்கேள்விகள் 1008 விடையுடன் — அச்சில்

குரு பப்ளிகேஷன்ஸ்

154, ராமகிருஷ்ண மடம் ரோடு,
மயிலாப்பூர், சென்னை—4.
Phone : 75132

விளம்பர விவரம்

1. கொஞ்சமோ நினைவின் வெள்ளம்
பி. ஸ்ரீ. ரூ. 4-00
2. கொடைக்கானல்
உதகை பொன்னழகன் 3-00
3. எழுபிறப்பு—தெய்வநாயகம் 2-50
4. சான்றோர் யார் - தெய்வநாயகம் 5-50

மற்றும்

அனைத்து நூற்களும் கிடைக்கப்பெறும்.

நன்செய்ப் பதிப்பகம்.

முன்னணி எழுத்தாளர்களின்

✻

நாவல்கள், கதைகள்

வெளியிடுகிறோம்.

✻

வீட்டுக்கோர் நூல்நிலையம் அமைக்க

சலுகை உண்டு.

விவரங்களுக்கு

குமரிப் பதிப்பகம்

✻

நாகப்பட்டினம்.

எமது புதிய வெளியீடுகள்

அமரர் கல்கி:

பொன்னியின் செல்வன் 5 பாகங்கள்	40–00
சிவகாமியின் சபதம்	20–00
கணையாழியின் கனவு	6–40
சோலைமலை இளவரசி	3–00

:: மங்கள நூலகம் ::

2, ஜோசியர் தெரு,

நுங்கம்பாக்கம் :: சென்னை 600034.

தரணி எங்கும்
தமிழ் மணம் பரப்பும்
தனிப்பெரு நிலையம்

தமிழ்ச் செல்வி நிலையம்

புத்தகம் வெளியிடுவோர் — விற்பனையாளர்,

13-A, சித்திரக்குளம் வடக்குத் தெரு,

மயிலாப்பூர், சென்னை-600004.

புத்தக விலைப் பட்டியல் - 1973 - '74.

			ரூ. பை.
1.	பொற்கனவே போய்வா	—கவிதாமணி	7—50
2	புழுதிக்கோலம்	,,	5—00
3	அன்னையும் கன்னியும்	,,	4—00
4.	சரண்	,,	3—00
5.	கவிதை மலர்கள்	,,	3—00
6.	தெய்வம் தெளிமின்	,,	2—50
7	வாழும் வழி	,,	2—50
8.	அறிவுக் கருவூலம்	,,	3—00
9.	வாராய் தோழி	— புலவர் வேதா	3—50
10.	கேரள விழாக்கள்	—இலக்குமி நாராயணன்	2—50

பிறைமுடி வெளியீடு

40, சஞ்சீவிராயன் கோயில் தெரு, சென்னை–21.

தந்தை பெரியார் அவர்கள்
இன்னும்
பல்லாண்டு வாழ்ந்து
நலம் பல புரிய வாழ்த்துகின்றோம்

↓

மகாலிங்கம் அச்சகம்,

தெற்கலங்கம் :: தஞ்சாவூர்.

தொலைபேசி எண். 123.

ஆர். எம். எஸ். ரேடியோ ஹவுஸ்

கீழராஜவீதி, :: மன்னார்குடி.

எல்லாவிதமான டிரான்ஸ்பார்மர்களும் மின்சார மோட்டார்களும் சிறந்த முறையில் ரீவைண்டிங் செய்து தரப்படும்.

ரேடியோ, டிரான்ஸிஸ்டர், டேப் ரிக்கார்டர், ஆம்ப்ளிபயர், மற்றும் எல்லா விதமான மின்சார சாதனங்களும் சிறந்த முறையில் பழுது பார்த்துத்தரப்படும்.

தங்கள் தேவைக்கு அணுகுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஆர். எம். எஸ். ரேடியோ ஹவுஸ்

மன்னார்குடி.

சிறந்த ஒலி, ஒளி அமைக்க

வாணி
சவுண்ட் சர்வீஸ்
சங்கேந்தி
தஞ்சை மாவட்டம்.

உரிமை : டி. சுவாமிநாதன்
சங்கேந்தி.

தந்தை பெரியார் அவர்கட்கு
பாராட்டு விழா
அறிஞர் அண்ணு அவர்கட்கு
பிறந்தநாள் விழா
இனிது நடைபெற
எங்களது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

ந. உ. சிவசாமி & சகோதரர்கள்
இராஜாமணி அரிசி ஆலை
இடையூர்-சங்கந்தி
திருத்துறைப்பூண்டி வட்டம்

தந்தை பெரியார் அவர்களின்

95-வது பிறந்த நாள் விழா

சிறப்புடன் விளங்க

வாழ்த்துகிறேன்,

↓

க. மாணிக்கம்

கோமதி லாரி புக்கிங் அலுவலகம்

முத்துப்பேட்டை

தஞ்சை மாவட்டம்

தொலைபேசி: 54 — அஞ்சல் 614704

பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்

689/1, வடக்கு 2ம் வீதி, புதுக்கோட்டை,

திருச்சி ஜில்லா.

நூல்களில் சில

பிளேட்டோவின் அரசியல்	7–50	கிரீஸ் வாழ்ந்த வரலாறு	10–00
பிளேட்டோவின் கடிதங்கள்	2–50	சீனாவின் வரலாறு	9–00
ராஜதந்திர யுத்தகள பிரசங்கங்கள்	6–50	ருஷ்யாவின் வரலாறு	6–50
சுதந்திரத்தின் தேவைகள் யாவை?	5-00	சன்யாட்சன்	6–00
புராதன இந்தியாவில் அரசியல்	4–50	கமால் அத்தாதுர்க்	5–50
மாஜினி மனிதன் கடமை	3–50	நான் கண்ட நால்வர்	4–50
அரசியல் வரலாறு	2–62	கார்ல் மார்க்ஸ்	3–25
மாஜினி	1–50	இக்கரையும் அக்கரையும்	2–00
காந்தியும் ஜவஹரும்	0–75	மனிதன் யார் ?	1–50
தலை தீபாவளி	1–25	நமது பிற்போக்கு	1–25
		நகைத்தல் நல்லது	1–75
		மற்றும் பல	

WITH BEST COMPLIMENTS

FROM

THE TEACHERS' PUBLISHING HOUSE

53-56, Coral Merchant Street, MADRAS-1.

AND

PADMA JOTHI PRASURALAYAM

53-56, Coral Merchant Street, MADRAS-1.

சமீப வெளியீடு.

புரட்சி இயக்குநர் சிகரம் :

K. பாலச்சந்தர் B. SC., அவர்கள் எழுதி
"**கல்கி**" வார இதழில் வெளிவந்து
பொதுமக்களின் பாராட்டுதல்களைப் பெற்ற

"மூன்று முடிச்சுகள்"

— தரமான புத்தகங்களை —

வெளியிடுவோர் :

அருண பப்ளிக்கேஷன்ஸ்

13/1, உஸ்மான் ரோடு,
தியாகராய நகர், சென்னை-600017.

பெரியார்

அவர்களது

95-ஆவது ஆண்டு பாராட்டு விழாவிற்கு
எமது நல் வாழ்த்துக்கள்.

—: அருளகம் :—

வ. மாணிக்கம் கம்பெனி

32, ஐயப்பச் செட்டித் தெரு,
சென்னை-1.

தமிழில் தலைசிறந்த நூல்களும்,

பிரசித்திப் பெற்ற

“ஸ்டார் கைடு” களும்

வெளியிடுவோர் :

P. B. 423 PHONE : **84989**

STAR PUBLICATIONS,

66, BIG ST.,

TRIPLICANE, MADRAS-600005.

20 ஆண்டுகளாக 300க்கும் அதிகமான

தரமான தமிழ் நூல்களை

வெளியிடுபவர்கள்

தொலைபேசி : **87553**

அருணோதயம்

2/76, பஜார் ரோடு

ராயப்பேட்டை :: சென்னை-14.

தந்தை **பெரியார்** அவர்கள்

இன்னும்

பல்லாண்டுகள்

வாழ்க! வாழ்கவே!

சோழன் பதிப்பகம்

முத்துப்பேட்டை,

தஞ்சை மாவட்டம்.

தொலைபேசி: 55 அஞ்சல்: 614704

சிறந்த தரமான

புத்தகங்களை

நூல் நிலையங்களுக்கு

அளிப்பவர்கள்

வாசு பிரசுரம்

185, லாயிட்ஸ் ரோடு,

சென்னை-14.

த. பெ. எண் 659 :: தொ. பே. எண். 82499

தந்தி : வெண்சங்கு தொலைபேசி : 108

நிறுவனம் : 1936.

எண்ணெய் குளிப்பிற்குச் சிறந்தது.

ஈடில்லா நறுமணம் மிகுந்தது.

தேவைக்கேற்ற அளவில் கிடைப்பது.

நறுமண சீயக்காய் தூள் • REGD No. 13817. •

வெண்சங்கு சீயக்காய்த்தூள்

எங்கும் கிடைக்கும்.

நறுமணத்தின் மறுபெயர்

செல்வம் ராணி
&
சேகர் ஊதுபத்திகள்

(ஸ்பெஷல் பத்திகள்)

தயாரிப்பாளர் :

வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,

தஞ்சாவூர்.

மகாலிங்கம் அச்சகம், தஞ்சாவூர்.